விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 தை 01 செவ்வாய்க்கிழமை (15.01.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 027

## பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில்
## 22 வயது இளைஞன் கோடரி பிடியினால் அடித்துக் கொலை



### சந்தேகத்தில் ஆட்டோ சாரதியும் அவரது மகனும் கைது

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் இடம்பெற்ற குழு மோதலில் 22 வயது இளைஞன் கோடரி பிடியினால் அடித்து படுகொலை செய்யப்பட்டுள்ளார். அதே இடத்தை சேர்ந்த வாசுதேவன் அமல்கரன் என்ற இளைஞனே 23

## உழவு இயந்திரத்தால் மோதி பொலிஸார் மீது தாக்குதல்

### மணல் கடத்தலை தடுக்க சென்ற போது கொடிகாமத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மணல் கடத்தலை தடுக்க சென்ற பொலிஸாரை மணல் கடத்தல்கார்கள் உழவு இயந்திரத்தால் மோதிவிட்டு தப்பிச்சென்ற சம்பவம் கொடிகாமம் கச்சாய் பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவத்தில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் மூன்று பொலிஸார் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொடிகாமம் கச்சாய் பகுதியில் மணல் கடத்தல் நடைபெறுவதாக சாவகச்சேரி பொலிஸா 23

## குடும்பப் பெண் மீது வாள்வெட்டு தாக்குதல்

### கோண்டாவிலில் நேற்றிரவு சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் பகுதியில் நேற்று இரவு வாள்வெட்டு குழுவினர் மேற்கொண்ட தாக்குதலில் குடும்பப்பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கோண்டாவில் மேற்கு பகுதியில் அமைந்துள்ள வீடு ஒன்றுக்கு நேற்று இரவு 2 மோட்டார் சைக்கிளில் சென்ற 6 பேர் கொண்ட குழுவினர் குறித்த வீட்டின் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். பின்னர் வீட்டின் 23

## முல்லை நாயாறு பகுதியில்
# பொங்கலை தடுக்க பிக்குகள் முயற்சி!



(பனிக்கன்குளம்) முல்லைத்தீவு - நாயாறு பகுதியில் உள்ள நீராவியடி பிள்ளையார் ஆலயத்தில் பொதுமக்கள் நேற்று பொங்கல் வழிபாடுகளில் ஈடுபட்ட போது அங்கு வந்த பௌத்த பிக்குகள் அதனை தடுக்க முற்பட்டமையால் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது. (23-ம் பக்கம் பார்க்க...)

## மாகாணசபை தேர்தலை உடனடியாக நடத்துங்கள்

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

மாகாணசபை தேர்தல்களை உடனடியாக நடத்தி மக்கள் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதே தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாடு எனவும் இந்த தீர்மானத்தை ஏற்கெனவே நாம் அரச தலைவர்களுக்கு அறிவித்திருந்தோம் எனவும் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். பழைய முறைமையில் தேர்தலை நடத்த செய்யவேண்டிய சிறிய திருத்த வரைபையும் நாமே வரைந்தும் கொடுத்துள்ளோம் 23

## இலஞ்சம் பெற்ற பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்

### இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் கைது

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரிப்பகுதியில் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றுக்கு பிரதேச செயலகத்தினால் வழங்கிய உதவிக்கு இலஞ்சம் பெற்ற பிரதேச செயலக பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவினால் கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி பூநகரிப்பகுதியில் இலஞ்சம் பெறுவதாக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிற்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் அங்கு சென்ற அதிகாரிகள் நேற்று பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றுக்கு வாழ்வாதார உதவி வழங்குதற்கு இலஞ்சம் தருமாறு 23




## அரசியல் நெருக்கடிக்கு இடமளிக்கப்படமாட்டாது

### - ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

(கொழும்பு)

நாட்டில் அண்மையில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி நிலைமைகள் தற்போது முழுமையாக சரி செய்யப்பட்டுள்ளன. அதில் மீண்டும் குழப்பங்களை ஏற்படுத்தும் வகையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி செயற்படாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

இதேவேளை, வேறு கட்சிகள் அவ்வாறு செய்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எதிர்க்கட்சி தலைவர் பதவி விவகாரம் 23

## ஜனாதிபதியை கொல்லச் சதி!

### பொலிஸ்மா அதிபரிடம் நேற்று விசாரணை

(கொழும்பு)

ஜனாதிபதியை கொலைசெய்ய முயற்சித்த குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணைகளுக்காக பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர, அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளர் திணைக்களத்தில் முன்னிலையாகியுள்ளார்.

குறித்த குற்றச்சாட்டு தொடர்பில் வெளியிடப்பட்ட குரல் 24

## தமிழர்களை ஒரு போதும் கைவிடேன்
## அவர்கள் விரும்பும் அரசியல் தீர்வினையே வழங்குவேன்

### பிரதமர் ரணில் உறுதி



(கொழும்பு)

தமிழர்களை ஒருபோதும் கைவிடப் போவதில்லை என்றும், தமிழர்கள் விரும்பும் அரசியல் தீர்வினை வழங்குவேன் என்றும், பிரதமர் ரணில் விக்கிரம 23

## அரசியல் யாப்பு நாட்டுக்கு தீங்கு

### -மல்வத்து பீட தேரர்

(கொழும்பு)

உத்தேச புதிய அரசியல் யாப்பு நாட்டுக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் இருப்பதாக மல்வத்து பீடத்தின் அநுநாயக்க நியாங்கொட விஜிதசிறி தேரர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களான பந்துல குணவர்தனவும், திலும் அமுனுகமவும் அவரை நேற்று சந்தித்து ஆசீர்வாதம் 24

## வகுப்புக்கள்

G.C.E. (O/L) எடுத்த மாணவர்களிற்கு Spoken English With Grammar. ஆங்கிலம் மற்றும் வர்த்தகம் G.C.E (O/L) 2019 Batch நடைபெறுகின்றது.

**Genius Institute**
**184 A.** நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
**Tel - 071 310 6279, 021 320 6656** (7153)



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சியாமளா முத்துக்கிட்னர்

(யா/சென்.ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் – முன்னாள் ஆசிரியர், ஆசிரியர் யா/ நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்)



இல.264, நாவலர்வீதி யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சியாமளா முத்துக்கிட்னர் நேற்று (14.01.2019) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கோபாலப்பிள்ளை - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் - கண்மணி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற முத்துக்கிட்னரின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கணேசலிங்கம், இராசலிங்கம் மற்றும் கனகேஸ்வரி (கனடா), சுதர்சன் (அவுஸ்திரேலியா), ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (16.01.2019) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு இல.264, நாவலர் வீதியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.264, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C-5158)
தகவல் - குடும்பத்தினர்
T.P : 077 375 3699

## வயிரவன் தியாகராசா

(பெரியப்பா, முன்னாள் புலோலி ப.நோ.கூ.ச. ஊழியர்)



உத்திராவத்தை, புலோலி வடகிழக்கு, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும், மந்துவிலைப்பிறப்பிடமாகவும் கொண்ட வயிரவன் தியாகராசா (13.01.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வயிரவன் - அம்மிணி தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - இரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும், செல்வராணியின் அன்புக் கணவரும், தியாகரதன் (பிரான்ஸ்), துஷாந்தன், துஷ்யந்தினி, நிலக்ஷன் (பிரான்ஸ்), திவ்யா ஆகியோரின் அன்புத் தந்தையும், கந்தையா, தர்மகுலசிங்கம், தவகுலசிங்கம் மற்றும் காலஞ்சென்ற தவபாக்கியவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுபேதா (பிரான்ஸ்), உமாவதி ஆகியோரின் அன்பு மாமனாரும், சனோஜன் (பிரான்ஸ்), சாதுர்யன் ஆகியோரின் அன்பு அப்பப்பாவும், பவளராணி, இராசமோகன், இந்திரமோகன், உதயமோகன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (14.01.2019) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆனைவிழுந்தான் இந்துமயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உத்திராவத்தை, புலோலி வட கிழக்கு, பருத்தித்துறை. (C-5156)
தகவல் - குடும்பத்தினர்
T.P : 077 260 5346

# மரண அறிவித்தல்கள்

## மார்க்கண்டு பராசக்தி (அப்பர் மாமி)



வட்டுக்கோட்டை யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் இல.05 முதலாம் பண்ணை கனகபுரம் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு பராசக்தி (அப்பர் மாமி) அவர்கள் 13.01.2019 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - முத்தம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மார்க்கண்டு (அப்பர்) அவர்களின் அன்பு மனைவியும், குகதாஸ் (தாஸ் - லண்டன்), கௌரி (கனகபுரம்), தேவதாஸ் (கண்ணன் - கனகபுரம்), ஜெயதாஸ் (ஜெயம் - பிரான்ஸ்), தர்மதாஸ் (தர்மா - லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஞானசக்தி (வட்டுக்கோட்டை) அவர்களின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (வட்டுக்கோட்டை) அவர்களின் மைத்துனியும், விஜயா (லண்டன்), மோகனராஜா (மோகன் - கனகபுரம்), காலஞ்சென்ற வசந்தகுமாரி, லிங்கேஸ்வரி (பிரான்ஸ்), யசிதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், தனுசன் (லண்டன்), நேசராஜன், சுமணன், பிரதோசன், யதுசன், தம்பிகன் (கிளிநொச்சி), பிரமிளா, கேசவி, ரஜனி (கிளிநொச்சி), சாருஜன், நிரோஜன், நிரோசா (பிரான்ஸ்), நேருஜன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (16.01.2019) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கனகபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.05, முதலாம் பண்ணை கனகபுரம், கிளிநொச்சி. (C-5155)
தகவல் - குடும்பத்தினர்
கண்ணன் (மகன்) 077 955 4904
மோகன் (மருமகன்) 077 075 4993

## கந்தையா தர்மலிங்கம்

(ஓய்வு பெற்ற பிரதம லிகிதர், பிரதேச செயலகம் – பூநகரி)

பிறப்பு – 23.04.1936 இறப்பு – 12.01.2019



அரியாலையை பிறப்பிடமாகவும் பாரதி வீதி, கச்சேரியடியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தர்மலிங்கம் கடந்த (12.01.2019) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னம் தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கனகேஸ்வரியின் அன்புக் கணவரும், அன்பரசன் (Qnet), அன்பழகன் (ஆசிரியர் யா/ நவாலி மகாவித்தியாலயம்), எழில்வதனி (கனடா), இளங்குமரன் (அமுதன் - இத்தாலி) ஆகியோரின் தந்தையும், ராகினி, அனுஷா, பாலதாஸ் (கனடா), தேவகலா (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனாரும், அமரர்களான இராசமணி, நற்குணம் மற்றும் மகேஸ்வரி, செல்வரட்ணம் (VKS - நெல்லியடி), சிவராசா (நிமலன்ஸ், கிளிநொச்சி), இராஜேஸ்வரி (சந்திரா லஜன்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான கந்தையா, நவரத்தினம், தளையசிங்கம் மற்றும் ரதி, சந்திராவதி, பரராஜசிங்கம், அமரர்களான சிவரத்தினம், கிருஷ்னேஸ்வரி மற்றும் பாலபரமேஸ்வரி (கனடா), சிவமலர் ஆகியோரின் மைத்துனரும், கஜானி, துஷானி, தாரகன், அபிநயன், அதிசயன், அஸ்விகா, அக்ஷயன் (கனடா), அம்சன் (கனடா), பிறைசன் (இத்தாலி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.01.2019) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

20/1 பாரதி வீதி, கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணம். (7156)
தகவல் - குடும்பத்தினர்
077 605 5559, 021 222 0013

## புதிய அரசியலமைப்பு சமர்ப்பிக்கப்படாத நிலையில்

# இல்லாத ஒன்றை இருப்பதாகக் காட்டி

# இனவாதத்தைத் தூண்ட முயற்சி!

## பிரதமர் ரணில் காட்டம்

(கொழும்பு)


புதிய அரசியலமைப்புக்கான சட்டமூலம் இதுவரை முன்வைக்கப்படாத நிலையில் இல்லாத ஒன்றை இருப்பதாகக் காட்டி, இனவாதத்தைத் தூண்டுவதற்கு ஒரு சாரார் முயற்சித்து வருவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குற்றம்சாட்டியுள்ளார்.

புதிய அரசியலமைப்பை கொண்டு வந்து நாட்டைப் பிளவுபடுத்தப் போவதாக தெரிவிப்பவர்கள் விகாரைகளுக்குச் சென்று வழிபட்டுவிட்டு வெளியில் வந்து மக்களுக்கு அப்பட்டமான பொய்களை தெரிவிப்பது விந்தையானதாகவுள்ளது. இல்லாத ஒன்றை இருப்பதாகக் கூறி இனவாதத்திற்கு தூபமிடவும் நாட்டுக்கு தீ வைக்கவும் முயற்சிக்க வேண்டாம் என அத்தகையோரை தாம் கேட்டுக் கொள்வதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் அலரிமாளிகையில் இடம்பெற்ற தேசிய தைப்பொங்கல் விழாவில் உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டைப் பிளவுபடுத்துவதற்காக புதிய அரசியலமைப்பைக் கொண்டு வரப் போவதாக சில அரசியல்வாதிகள் மகாநாயக்க தேரர்களை ஏமாற்றி திசை திருப்ப பார்ப்பது கவலைக்குரியதாகும். பஞ்சசீலத்தை பாதுகாக்கின்றவர்கள் என தம்மை அடையாளப்படுத்திக் கொண்டு மகாநாயக்க தேரர்களுக்கு பொய் தகவல்களை வழங்குபவர்களுக்கு நடக்கப் போவது என்னவென்று தெரியாது.

புதிய அரசியலமைப்புக்கு -பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியமாகும். சில ஊடகங்கள் இல்லாத அரசியலமைப்பை இருப்பதாகக் காட்ட முயற்சிக்கின்றமை கவலைக்குரியதாகும். நாட்டைப் பிளவுபடுத்தப் போவதாகவும் பொலிஸ் துறையை சீர்குலைக்கப் போவதாகவும் அவர்கள் விமர்சித்து வருகின்றனர். பொலிஸ் தொடர்பான கருத்துக்கள் அரசியல் கட்சி, முதலமைச்சர்களின் யோசனைகளிலும் குறிப்பிடப்பட்டுள்ள ஒன்றாகும்.



கூட்டமைப்பின் முதலமைச்சர் ஒருவர் பொலிஸாருக்கு அதிகளவு அதிகாரம் வழங்கவேண்டுமென கூறுவதாகவும் அது தொடர்பில் தாம் எவருக்கும் தெளிவுபடுத்த முடியுமென்றும் தேவையேற்படின் அதனை எதிர்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கருத்துக்களையும் அரசியலமைப்பு யோசனைகளை முன்வைக்க முடியும். இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்துக்கும் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதற்கும் அரசியல் தீர்வு அவசியமாகிறது.

இனவாதத்திற்கு தூபமிட்டு பொய்யான அரசியலமைப்பை மக்களுக்கு காட்டி பிச்சைக்காரனின் புண்ணைப் போன்று அதனையே காட்டி நாட்டுக்கு தீ வைக்க முயற்சிக்க வேண்டாம் எனவும் பொய்யான விமர்சனங்களை மேற்கொள்ளும் தரப்பினரிடம் கேட்டுக் கொள்வதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பு ஒன்று இருக்குமானால் அதனை பகிரங்கமாக காட்டட்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## எதிர்வரும் தேர்தல்களை சந்திக்க ஐ.தே.க.தயார்

### அகிலவிராஜ் காரியவசம் தெரிவிப்பு



(கொழும்பு)

எதிர்வரும் அனைத்துத் தேர்தல்களிலும் ஐ.தே.க. பாரியளவில் வெற்றிபெறும் என ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

நிகவெரட்டிய பகுதியில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்

"எதிர்வரும் காலத்தில் பெரும்பாலும் ஜனாதிபதித் தேர்தலே நடைபெறும். எந்தத் தேர்தல் வந்தாலும் அவற்றினை எதிர்கொண்டு ஐ.தே.க. பாரிய வெற்றியைப் பெறும்.

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெறும் என்பதில் நூற்றுக்கு ஐநூறு வீதம் நம்பிக்கை இருக்கின்றது. மக்களுக்கு யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பது தெரியும்.

இனியும் மக்கள் தமது தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதில் தவறிழைக்க மாட்டார்கள். ஐக்கிய தேசியக் கட்சி மக்கள் செல்வாக்குள்ள கட்சி.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் மாகாணசபைத் தேர்தலில் வெற்றிபெற்று எதிர்வரும் 10 வருடங்களுக்கு பலம்மிக்கதொரு அரசாங்கத்தினை அமைக்க எம்மால் முடியும். அதற்கான ஆணையை மக்கள் வழங்குவார்கள்" என அகிலவிராஜ் காரியவசம் மேலும் தெரிவித்துள்ளார்.(இ-7)

## ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் எவ்வித உடன்பாடும் இல்லை

### விமல் வீரவன்ச விளக்கம்



(கொழும்பு)


ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் இது வரையில் எவ்வித உடன்பாட்டிற்கும் வரவில்லை என கூட்டு எதிரணி பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள் ளார்.

ஜனாதிபதிக்கும் மகிந்த ராஜபக்ஷவிற்கும் இடையிலான ஒற்றுமையை கெடுக்கும் விதமாகவே இவ்வாறு ஜனாதிபதி வேட்பாளர் தொர்டர்பில் கருத்துக்கள் வெளியிடப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மகிந்த ராஜபக்ஷ மட்டுமே ஜனாதிபதி வேட்பாளராக தகுதியுடையவர் என பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## தவறுகளைத் திருத்திக்கொண்டு முன்னோக்கி செல்வது அவசியம்

### சரத் பொன்சேகா அறிவுரை



(கொழும்பு)

தவறுகளைத் திருத்திக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சி முன்னோக்கிச் செல்வது அவசியமென, நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையும் அமைச்சுப் பொறுப்புக்களும் கிடைத்தாலும் இன்னும் உரிய முறையில் ஜனநாயகம் கிடைக்கவில்லையென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மஹர பிரதேசத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தொகுதிக் குழு கூட்டத்தில் நேற்றுக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் அரசாங்கம் ஆட்சிக்கு வந்த நான்கரை வருடங்களுக்குள் தனது கட்சியில் தவறுகள் இடம் பெற்றதுடன், மக்களின் நோக்கங்களும் நிறைவேறவில்லையெனவும் பொன்சேகா தெரிவித்துள்ளார். (இ-7)

## பெரமுனவைச் சேர்ந்தவரே ஜனாதிபதி

### பசில் ராஜபக்ஷ திட்டவட்டம்

(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்தவராகவே இருப்பார் என்று, அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

2019 ஆம் ஆண்டு முடிவுக்குள், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைமையிலான புதிய கூட்டணியில் இருந்து ஜனாதிபதி ஒருவர் தெரிவு செய்யப்படுவார் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த தேர்தலில் சில மாவட்டங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் க்ட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. ஆகிய கட்சிகளை விட, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அதிக பலத்தை நிரூபித்திருக்கிறது என்றும், எதிர்காலத் தேர்தல்களில் அதனை விடப் பெரிய பலத்தைப் பெறும் என்றும் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.



தற்போது தமது கட்சியின் இலக்கு ரணில் விக்கிரசிங்கவோ, சஜித் பிரேமதாஸவோ அல்லது நவீன் திஸநாயக்கவோ அல்ல என்றும், அனைத்துலக சூழ்ச்சிக்காரர்களையே தாம் இலக்கு வைப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அடிலெய்டில் யார் பொங்கவைப்பது?

## இந்தியா - அவுஸ்திரேலியா இன்று 2ஆவது மோதல்

இந்தியா - அவுஸ்திரேலிய அணிகள் மோதும் இரண்டாவது ஒருநாள் போட்டி அடிலெய்டில் இன்று நடக்கிறது. இன்றைய பொங்கல் திருநாளில் எந்த அணி வெற்றி பெற்று இரசிகர்கள் மனதை மகிழ்ச்சியால் குளிர்விக்கப் போகின்றது என்று ஆவலோடு எதிர்பார்க்கப்படுகிறது.

அவுஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. சிட்னியில் நடந்த முதல் போட்டியில் அவுஸ்திரேலியா வெற்றி பெற, இந்தியா 0-1 என பின் தங்கியது. இரு அணிகள் மோதும் இரண்டாவது போட்டி அடிலெய்டில் நடக்கிறது.

**சிக்கலில் துடுப்பாட்டம்**

கடந்த 2016 முதல் இந்திய அணியின் வெற்றிகளுக்கு ரோகித் சர்மா, ஷிகர் தவான், அணித் தலைவர் ஹோலி என 'ரொப் 3' துடுப்பாட்ட வீரர்களின் சிறப்பான ஓட்டக்குவிப்பு தான் முக்கிய காரணம். இதற்கேற்ப முதல் போட்டியில் தொடக்க வீரர் ரோகித் சதம் அடித்து ஆறுதல் கொடுத்தார்.

மே.தீவுகள் தொடருக்குப் பின் 2 மாதம் ஓய்வில் இருந்த ஷிகர் தவான், எவ்வித போட்டி பயிற்சியும் இல்லாமல் நேரடியாக களமிறங்கியதால் ஏமாற்றினார். அம்பதி ராயுடுவும் சோபிக்கவில்லை.

அடிலெய்ட் மைதானத்தில் அணித் தலைவர் ஹோலியின் சராசரி 46.66 ஆக உள்ளது நம்பிக்கை தருகிறது. 'சீனியர்' தோனி அதிக பந்துகளை வீணடிப்பதால் அணிக்கு சிக்கல் ஏற்படுகிறது. தினேஷ் கார்த்திக்கிற்குப் பதில் கேதர் ஜாதவ் வரலாம். விஜய் ஷங்கர் நேற்று மதியம் தான் அங்கு சென்றார். இதனால் அணியில் இடம்பெறுவது சந்தேகமே.

**சிராஜ் வாய்ப்பு**

வேகத்துக்கு சாதகமான ஆடுகளங்களில் 'சகலதுறை வீரர்' பாண்ட்யா இல்லாமல் இந்தியா தடுமாறுகிறது. மொஹமட் ஷமி ஓட்டங்களைக் கட்டுப்படுத்தினாலும் விக்கெட் வீழ்த்தவில்லை. புவனேஷ்வர் குமார், கலீல் அகமட் ஓட்டங்களை வாரி வழங்கினர். கலீல் இடத்தில் மொஹமட் சிராஜ் சேர்க்கப்படலாம். சுழலில் குல்தீப், ஜடேஜா விக்கெட் வீழ்த்தினால் நல்லது.

**வெற்றி நம்பிக்கை**

ஸ்மித், வோர்னர் தடை, டெஸ்ட் தொடரில் தொல்லை கொடுத்த கம்மின்ஸ், ஹேசல் வுட் என முன்னணி பந்துவீச்சாளர்கள் இல்லாத நிலையிலும் முதல் போட்டியில் ஆஸி., வென்றது. துடுப்பாட்டத்தில் கவாஜா, ஷோன் மார்ஷ், ஹேண் ட்ஸ்கோம்ப் கைகொடுக்கலாம். பந்துவீச்சில் ரிச்சர்ட்சன், பெஹ்ரன்டர்ப் மீண்டும் மிரட்டலாம்.

**மழை வருமா**

அடிலெய்டில் வெப்பநிலை அதிகபட்சம் 39, குறைந்த அளவு 30 டிகிரி செல்சியசாக இருக்கும். வானம் தெளிவாக இருக்கும். மழை வர வாய்ப்பு இல்லை.

**கைகொடுக்கும் 'வேகம்'**

இரண்டாவது போட்டிக்கான அடிலெய்ட் ஆடுகளம் வேகத்துக்கு சாதகமாக இருக்கும், கடைசியாக இங்கு நடந்த 5 போட்டிகளில் முதலில் களமிறங்கிய அவுஸ்திரேலியா (231/10), இங்கிலாந்து (196/10), அவுஸ்திரேலியா (369/7), பாகிஸ்தான் (213/10), அயர்லாந்து (237/10) அணிகள் பெரும்பாலும் குறைந்த ஓட்டங்களுக்கு சுருண்டன.

**மைதானம் ராசியா?**

அடிலெய்டில் இரு அணிகளும் 5 போட்டியில் மோதின. இதில் இந்தியா 4ல் தோற் றது. கடைசியாக 2012ல் நடந்த போட்டியில் இந்தியா வென்றது.

◆ மற்ற அணிகளுக்கு எதிராக இங்கு களமிறங்கிய 9 போட்டிகளில் இந்தியா 7ல் வென்றது. 1 ல் தோற்க, ஒரு போட்டி 'டை' (இலங்கை, 2012) ஆனது.

◆ ஒட்டுமொத்தம் 14 போட்டிகளில் இந்தியா 8ல் வெற்றி, 5ல் தோல்வி, 1ல் 'சமன்' செய்தது.



பயிற்சியின்போது 'தல' தோனி

**சரிப்பட்டு வருவாரா தோனி**

'தல' தோனி (வயது 37), கடந்த 2005 ல் சர்வதேச கிரிக்கெட்டில் கால்பதித்தார். 2014 கடைசியில் டெஸ்டில் இருந்து விடைபெற்ற இந்த ஆண்டு உலக கிண்ணத் தொடருடன் அனைத்துவித போட்டிகளிலும் ஓய்வு பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் ஒருநாள் அணியில் எந்த இடத்தில் துடுப்பாட்டம் செய்வது என்பது மட்டும் இன்னும் குழப்பமாகத்தான் உள்ளது. பெரும்பாலும் 5 (சராசரி 50.70 ஓட்.,), 6வது (46.33) இடத்தில் களமிறங்குவார். 4ஆவது இடத்தில் சராசரி 52.95 என சிறப்பாக உள்ளது.

'ஸ்டிரைக் ரேட்' பொறுத்தவரையில் 4வது இடத்தில் 94.21, 5ல் 86.08, 6ல் 83.23 ஆக உள்ளது. கடந்த 2016ல் அவுஸ்திரேலிய மண்ணில் 4ஆவதாக துடுப்பெடுத்தாட வந்த தோனி 2 போட்டியில் 18 ஓட்டங்கள் மட்டும் எடுத்தார். அன்று முதல் தற்போது வரை தோனி 8 போட்டிகளில் 4வது இடத்தில் துடுப் பாட்டம் செய்தார். இதன் சராசரி 24.75, ஸ்டிரைக் ரேட் 77.34 தான்.

ஆனால் தோனியை அம்பதி ராயுடுவுக்குப் பதில் 4வதாக களமிறக்க வேண்டும் என துணைத் தலைவர் ரோகித் விரும்புகிறார். இதை ஹோலி ஏற்கமாட்டார். இன்றும் துடுப்பாட்ட வரிசையில் எவ்வித மாற்றமும் இருக்காது எனத் தெரிகிறது.


திருநெல்வேலி கிழக்கு வாலையம்மன் சனசமூக நிலைய முன்னாள் உறுப்பினர்களின் அனுசரணையுடன்

நல்லூர் நொதேண் விளையாட்டுக் கழகமும்

கல்வியங்காடு, நல்லூர் நண்பர்களும் இணைந்து நடாத்தும்

வருடாந்த மரபியல் தமிழ்த்

தைப்பொங்கல் விழா - 2019

காலம் - 19, 20, 26, 27.01.2019. இடம் - யா/செங்குந்த இந்துக் கல்லூரி மைதானம்

எமது பிரதேச சமூக நலன்விரும்பிகளான அமரர்கள் ஆ.கதிரவேலு, க.பாலசுந்தரம், க.சண்முகநாதன், சி.தனபாலசிங்கம், கா.இராதாகிருஸ்ணன், சி.சிவபாலன், க.சண்முகநாதன் (பவுண்), சி.தீசன், ந.ஞானகுமாரன், ச.இராஜரட்ணம் ஆகியோர் ஞாபகார்த்தமாக நடாத்தப்படும் விளையாட்டு நிகழ்ச்சிகள்

19.01.2019 துடுப்பாட்டம் (அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலானது)
20.01.2019 மரதன் ஓட்டம் (திறந்த முறையிலானது)
26.01.2019 தாச்சி மறித்தல் (அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலானது)
27.01.2019 காலை - தைப்பொங்கல் விழா
- கரப்பந்தாட்டம் (அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலானது)
- கயிறு இழுத்தல், முட்டி உடைத்தல்,

மாலை
- துடுப்பாட்ட காட்சிப் போட்டி,
- சிறுவர் நிகழ்ச்சிகள்.
- தலையணைச் சண்டை.

(மரதன் ஓட்டப் போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் 19.01.2019 மதியம் 12.00 மணிக்கு முன்பதாக பெயர்களை பதிவு செய்வதுடன் 20.01.2019 காலை 05.30 மணிக்கு முன்பாக மருத்துவச் சான்றிதழுடன் கல்வியங்காட்டுச் சந்திக்கு சமுகமளிக்கவும்)

தொடர்புகளுக்கு: 076 827 3570, 075 041 0487

அனைத்துப் போட்டிகளுக்கும் பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்

(C-5159)

## ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

ஐஸ் எனும் போதைப் பொருளுடன் நபர் ஒருவர் முந்தலம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை 3 கிராம் 650 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளுடன் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுட்டுள்ளன.

சந்தேகத்திற்கிடமான வாகனம் ஒன்று தொடர்பில் பொலிஸாரிற்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த நபர் வாகனத்தை உடப்பு பகுதியில் மறைத்து வைத்துவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

பின்னர் மோப்ப நாயின் உதவியுடன் வாகனத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஐஸ் போதைபெபாருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன் சந்தேக நபரையும் கைது செய்துள்ளனர்.

புத்தளம், பாலாவி பகுதியை சேர்ந்த 21 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் முந்தலம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

### புதிய அரசியலமைப்பு மூலம்

# வடக்குக்கு சட்ட அதிகாரம் வழங்க ஒருபோதும் இடமளிக்க மாட்டோம்

## ஜே.வி.பி. திட்டவட்டம்



(கொழும்பு)

புதிய அரசமைப்பினூடாக, வடக்கு மாகாணத்துக்கு, பொலிஸ், சட்ட அதிகாரம் கோரப்படுவதாகவும் இதற்கு, தமது கட்சி ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என்றும் கூறிய ஜே.வி.பி, கடந்த 3 வருடங்களில் நிறைவேற்ற முடியாதுபோன அரசமைப்பை, அடுத்த ஒன்றரை வருடங்களுக்குள் நிறைவேற்றக்கூடிய இயலுமை, தற்போதைய நாடாளுமன்றத்துக்கு இல்லையென்றும் தெரிவித்துள்ளது.

தற்போது நடைமுறையிலிருக்கும் 1978 ஆம் ஆண்டு அரசமைப்பு, நடைமுறையில் இந்த நாட்டுக்குப் பொருத்தமற்றுள்ளதால், புதிய அரசமைப்பொன்றின் தேவை அவசியமாகியுள்ளதென, கொழும்பு - பத்தரமுல்லையில் அமைந்துள்ள ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த கட்சியின் ஊடகப் பேச்சாளர் விஜித ஹேரத் எம்.பி.தெரிவித்தார்.

உலகநாடுகளைப்போன்று, இலங்கையிலும் ஏற்பட்டுள்ள சமூக மாற்றங்களைக் கருத்திற்கொண்டு, புதிய சமூகத்துக்கு பொருத்தமான அரசமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டிலேயே தாம் உள்ளதாகத் தெரிவித்த அவர், அந்த அரசமைப்பினூடாக, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்பட்டு, சகலரதும் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமெனக் கோரினார்.

2015 ஆம் ஆண்டில், புதிய அரசமைப்பு குறித்த பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், 2006 ஆம் ஆண்டு மகிந்த ஆட்சியின் போதும், அதற்குரிய முன்னெடுப்புகள் இடம்பெற்றன என்று தெரிவித்த விஜித எம்.பி, அந்த அனைத்துச் சந்தர்ப்பங்களிலும், ஜே.வி.பியின் பங்களிப்பு இருந்ததெனச் சுட்டிக்காட்டினார்.

அதேபோல், அரசமைப்பு உருவாக்கத்துக்காக நியமிக்கப்பட்ட 21 பேர் அடங்கிய வழிநடத்தல் குழுவால், ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வரமுடியாமல் போனதன் காரணமாகவே, அக்குழுவின் அறிக்கையை இன்றுவரையில் வெளிப்படுத்த முடியாமல் போயுள்ளது எனவும் குறிப்பாக, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்க, மகிந்த அணியும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும், எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றன என்றும் அவர் எடுத்துரைத்தார்.

இவ்வாறான நிலைமையிலேயே, புதிய அரசமைப்பு வடிவம் ஒன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லையென, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அண்மையில் தெரிவித்தாகக் கூறிய விஜித ஹேரத், புதிய அரசமைப்பு, நாட்டைப் பிளவுபடுத்தும் என்றும் வடக்கையும் கிழக்கையும் ஒன்றிணைக்கும் என்றும், அரசமைப்பை நிறைவேற்றிக்கொள்ள கையுர்த்தும் எம்.பிக்களுக்கு, 400 மில்லியன் வழங்கப்படுவதாகவும், போலிப் பிரசாரங்கள் செய்யப்பட்டனவெனச் சுட்டிக்காட்டினார்.

அதேபோல், 20ஆவது அரசமைப்புத் திருத்தம் பற்றியும் போலிப் பிரசாரங்கள் செய்யப்படுவதாகச் சுட்டிக்காட்டிய அவர், மகிந்த அணியினர் மாத்திரமன்றி, ஐக்கிய தேசியக் கட்சியினரும் சுமந்திரன் எம்.பியும் கூட, இவ்வாறான பிரசாரங்களை செய்துள்ளனரெனத் தெரிவித்ததோடு, மக்கள் இவ்வாறான பொய்களை நம்பி ஏமாற்றமடையக் கூடாதெனவும் தெரிவித்தார். (இ-7)


## வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்
## பொது அறிவித்தல்

தைப்பொங்கல் தினமான இன்று எமது பிரதேசத்தில் நடைபெறவுள்ள பட்டப்போட்டி நிகழ்வுகளைக் கண்டுகளிக்க பெருமளவான மக்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றமையினால் ஏற்படக்கூடிய போக்குவரத்து நெரிசல்களை தவிர்க்கும் பொருட்டு நகராட்சி மன்றத்தினால் கீழ்க்குறிப்பிட்டவாறு மாற்று ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவுள்ளன. சகல பொதுமக்களும் சாரதிகளும் வீதியைப் பயன்படுத்துபவர்களும் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்றி சிரமங்களை தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

- இன்று பி.ப.2:00 மணி தொடக்கம் இரவு 11:00 மணிவரை வல்வெட்டித் துறை சந்தியிலிருந்து ஆலடிச்சந்தி வரையான பருத்தித்துறை பொன்னாலை வீதி (காங்கேசன்துறை வீதி) சகல வாகனப் போக்குவரத்திற்கும் முற்றாக தடை செய்யப்பட்டிருக்கும்.
- வல்வெட்டித்துறை சந்தியினூடாகச் செல்லும் பிரதான வீதிகளில் வல்வை மகளிர் தொடக்கம் வல்வெட்டித்துறை சந்திவரையான பகுதியும், சிதம்பராகல்லூரி தொடக்கம் ஆலடி சந்தி வரையான பகுதியும் தூபிச்சந்தியிலிருந்து இலங்கை வங்கி வரையான யாழ்.வீதியும் போக்குவரத்துக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நான்கு சில்லு வாகனங்கள் மற்றும் கனரக வாகனங்கள் எதுவும் இப்பகுதிக்குள் அனுமதிக்கப்படாது.
- மேற் குறித்த பகுதிக்குள் வசிக்கும் மக்கள் தமது வாகனங்களை உட்கொண்டு வருதல் மற்றும் வெளிக்கொண்டு செல்லுதலுக்கான ஏற்பாடுகளை பி.ப. 2:00 மணிக்கு முன்னதாக ஒழுங்குபடுத்திக் கொள்ளவும்
- வல்வெட்டித்துறை ஊடாக போக்குவரத்துச் செய்யும் சகல வாகன சாரதிகளும் பொதுமக்களும் மாற்றுப்பாதைகளைப் பயன்படுத்தி சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ளவும்.
- பட்டப்போட்டி நிகழ்வுகளுக்கு வருகை தருபவர்கள் தமது வாகனங்களை உரிய வாகனத் தரிப்பிடங்களில் நிறுத்தவும்.
- வீதியோரங்களில் வாகனங்களை நிறுத்த அனுமதிக்கப்படமாட்டாது. அனுமதிக்கப்படாத இடங்களில் நிறுத்தப்படும் வாகனங்கள் பொலிஸாரால் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.
- வல்வெட்டித்துறை சந்தி தொடக்கம் நகராட்சி மன்றம் வரையான பிரதான வீதியோரங்களில் எந்தவொரு வியாபார நடவடிக்கைகளுக்கும் அனுமதிக்கப்படமாட்டாது.

கோ.கருணானந்தராசா,
தவிசாளர்,
வல்வெட்டித்துறை நகராட்சிமன்றம்.

(C-5151)


## தொடர் தெய்வீகப் பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, கொண்டலடி விநாயகர் ஆலய மஹோற்சவம் நேற்றையதினம் ஆரம்பமானது.

எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்கிழமை வரை மஹோற்சவம் இடம் பெறவுள்ளது.

இதில் தினமும் முற்பகல் 11 மணி முதல் வவுனியாத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் தமிழருவி த.சிவகுமாரனின் "காலமும் கருத்தும்" என்னும் பொருளில் தொடர் தெய்வீகப் பேருரை இடம்பெறவுள்ளது.

மாலையில் அறநெறிப் பாடசாலை மாணவ-மாணவியரின் கலை நிகழ்ச்சிகளும் விசேட மேளக்கச்சேரிகளும் இடம்பெறவுள்ளன. (இ-7)

## இராசி பலன்

| | | | |
|---|---|---|---|
| செவ் | சந் | | |
| | இராசி பலன் கிரகநிலை சந்திராஷ்டமம் சுவாதி | | ராகு |
| கேது சூரி,புத | | | |
| சனி | குரு, சுக் | | |

**15.01.2019**
தை 01, செவ்வாய்க்கிழமை
சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு
நவமி முன்னிரவு 8.22 மணிவரை
அச்சுவினி முற்பகல் 10.12 மணிவரை
சுபநேரம் 11.04-12.34 மணிவரை
இராகுகாலம் 3.34-5.04 மணிவரை
சபரிமலை ஐயப்பன் ஜோதி தரிசனம்
தைப்பொங்கல் திருநாள்
வளவன்

**மீனம்** — பொது வாழ்வில் பாராட்டும், புகழும் கூடும் நாள், உறவினர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**மேடம்** — நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், குடும்பத்தினர் உங்களின் முயற்களுக்கு பக்க பலமாக இருப்பர், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்** — பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச்சொல்லுக்கு ஆட்பட நேரிடலாம், வெளியூர்த்தொடர்புகள் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்** — பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எதிர்பார்த்த தனவரவுகள் வந்து சேரலாம், இனிய செய்திகள் இல்லம் தேடி வரலாம்.

**கும்பம்** — உடன் பிறப்புக்கள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், வீண் பிடிவாதம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது, தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கடகம்** — கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**மகரம்** — பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனையைக் கூறலாம், பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்** — உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், மறதியால் விட்ட காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு** — மனதில் உற்சாகமும், மகிழ்ச்சியும் அதிகரிக்கும், உறவினர்கள் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**விருச்சிகம்** — அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், கௌரவமான நாள்.

**துலாம்** — உறவினர்கள் வருகையால் உற்சாகம் பெருகும் நாள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும் வாய்ப்புண்டு.

**கன்னி** — மனதில் இனம் புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், வேலைச் சுமை அதிகரிக்கும் நாள்.

# உண்ணிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்ட இரண்டு பிள்ளைகளின் தாய் மரணம்

இரண்டு வாரங்களாக காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

உரும்பிராய் கிழக்கை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயான செ.ஜெனனி (வயது 46) என்பவரே உயிரிழந்தவராவார்

இவர் கடந்த 30 ஆம் திகதி இரணைமடுவுக்கு சென்று வீடு திரும்பியுள்ளார். அன்று மாலையில் இருந்து காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்ததாகவும் கடந்த 2 ஆம் திகதி மருதனார் மடத்தில் உள்ள தனியார் வைத்தியசாலைக்கு சென்றுள்ளார். அங்கு ஒரு ஊசி மருந்து ஏற்றப்பட்டுள்ளது.

பின்னர் மீண்டும் 4 ஆம் திகதி காய்ச்சல் ஏற்பட்டதை தொடர்ந்து அதே தனியார் வைத்தியசாலைக்கு சென்று ஊசிமருந்து ஏற்றியுள்ளார்.

பின்னர் காய் ச்சல் குணமடைந்து விட்ட தாக தெரிவித்து வீட்டுக்கு சென்றுள்ளார்.

பின்னர் 7 ஆம் திகதி இரவு மீண்டும் காய்ச்சல் அதிகரித்தவுடனே அதே வைத்தியசாலைக்கு சென்றுள்ளார். அங்கு வைத்திய சாலை வாசலில் மயக்கமடைந்து விழுந்துள்ளார். உடனடியாக அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

அங்கு அவரை பரிசோதித்த வைத்தியர்கள் அவருக்கு உண்ணிக்காய்ச்சால் இருப்பதாக தெரிவித்து சிகிச்சை அளித்துள்ளனர். இந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் அவர் உயிரிழந்துள்ளார். (இ-9-10)

# இராணுவ வீரர் எனக் கூறி நிதி சேகரித்தவர் கைது!



(சாவகச்சேரி)

கொடிகாமத்தில் இராணுவ முகாமை சேர்ந்த இராணுவ வீரர் என கூறி வர்த்தக நிலையங்களில் நிதி சேகரித்த நபர் ஒருவர் மக்களால் பிடிக்கப்பட்டு கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

தமது இராணுவ முகாமில் சித்திரை வருடப்பிறப்பு தினத்தில் நிகழ்வு ஒன்று நடைபெறவுள்ளதாகவும் அதற்காக நிதி சேகரிப்பாதாகவும் கூறி சிங்கள மொழியி லான கடிதம் ஒன்றை காண்பித்தே இவ்வாறு நிதி சேகரித்து வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-29)

# விமலின் வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

சட்ட விரோதமான முறையில் வருமானங்களும் சொத்துக்களும் ஈட்டியுள்ளமைக்கு எதிராக பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை மார்ச் மாதம் 27 ஆம் திகதி வரை ஒத்திவைக்க கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் ஹெட்டியாராச்சி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் வழக்கு தொடர்பான தனியார் வங்கியின் கணனி ஆதாரங்களை பரிசீலனை செய்ய உத்தரவிடப்பட்டிருந்த போதும் அதற்காக குறித்த வங்கி அனுமதி வழங்கவில்லை என இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

எனவே குறித்த வங்கியின் கணனி ஆதாரங்களை பரிசீலனை செய்ய அனுமதி வழங்குமாறு விஷேட உத்தரவு ஒன்றை பிறப்பிக்குமாறு அவர் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதனடிப்படையில் குறித்த கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் வழக்குடன் தொடர்புடைய கணனி ஆதாரங்களை வழங்குமாறு குறித்த வங்கிக்கு உத்தரவிட்டுள்ளது. அத்துடன் குறித்த வழக்கை மார்ச் மாதம் 27 ஆம் திகதி வரையில் ஒத்திவைக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

2010 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2014 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவின் சட்டரீதியான வருமானத்தை தாண்டி 75 மில்லியன் ரூபாவுக்கும் அதிக வருமானங்களும் சொத்துக்களும் சேகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவை வருமானங்கள் மற்றும் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றம் எனவும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சட்டவிரோதமாக கேபிள் இணைப்புக்களை பொருத்துபவர்கள் மீது கடும் நடவடிக்கை

## யாழ்.மாநகர முதல்வர் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம் )

சுட்டவிரோத கேபிள் இணைப்புக்களை அகற்றும் பணிகள் மாநகர சபையால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றதுடன், சட்டவிரோத கேபிள் இணைப்புக்களை பொருத்துபவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக யாழ்.மாநகர முதல்வர் இ.ஆனல்ட் தெரிவித்தார்.

யாழ்.மாநகர எல்லைப் பகுதியில் பருத்தித்துறை முதல் கல்வியங்காடு ஊடாக திருநெல்வேலிப் பகுதியில் சட்டவிரோத கேபிள் இணைப்புக்களை அகற்றும் பணிகள் முதல்வர் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் சட்டவிரோத கேபிள் இணைப்புக்களை வழங்குவதற்கு பெயர் தெரியாத நிறுவனம் ஒன்று மின்கம்பங்களை நாட்டி கேபிள் இணைப்புக்களை வழங்கியுள்ளனர்.

மாநகர முதல்வர் மற்றும் ஆணையாளர் உட்பட பலர் சென்று சட்டவிரோத கேபிள் இணைப்புக்களை வழங்கும் நிறுவனத்திருக்கு பல அறிவுறுத்தல்களை வழங்கிய போதும், இதுவரையில் மாநகர சபையுடன் தொடர்புகொள்ளவில்லை.

ஏற்கனவே, ஒரு நிறுவனம் கேபிள் இணைப்புக்களை வழங்குவதற்கான அனு மதி விண்ணப்பப் படிவத்தை மாநகர சபையிடம் வழங்கி யுள்ளது.

இது தொடர்பில் கலந்துரையாடி, எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென்று தீர்மானித்துள்ள போதிலும், அனுமதி கோரியுள்ள நிறுவனத்திற்கே மாநகர சபையால் உத்தியோகபூர்வ அனுமதி வழங்கப்படாத நிலையில், இந்த நிறுவனம் ஏனைய உள்ளூராட்சி நிறுவனங்களின் ஊடாக வந்து யாழ்.மாநகர எல்லைப் பகுதிக்குள் நிலங்களை தோண்டி மின்கம்பங்களை நாட்டி கேபிள் இணைப்புக்களை வழங்கியுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகளை ஒரு போதும் அனுமதிக்கமுடியாது. இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில் மாநகர சபையின் அனுமதியின்றி சட்டவிரோத கேபிள் இணைப்புக்களை மேற்கொண்டால், சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென பொலிஸ் நிலையத்திற்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத கேபிள் இணைப்புக்களை அகற்றும் பணியில் ஈடுபட்டிருக்கின்றோம். கேபிள்கள் அறுத்து ஒழிக்கப்படுவதுடன், மின் கம்பங்கள் மாநகர சபை வளாகத்தில் சேமிப்பதற்கான நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பருத்தித்துறை வீதியில் சுமார் 50 ற்கும் மேற்பட்ட கேபிள் இணைப்புக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

அவற்றை அகற்றும் பணிகள் முன்னெடுக்கப் படும். தொடர்ந்தும் சட்ட விரோதமான கேபிள் இணைப்புக்களை பொருத்தினால், தொடர்ந்தும் மாநகர சபை அகற்றும் பணிகளை முன்னெடுக்கும் என்றும் மாநகர முதல்வர் மேலும் தெரிவித்தார். (இ-101)

# அறிவாலய ஆண்டு விழாவும் பெயர்ப்பலகை திரை நீக்கமும்

(யாழ்ப்பாணம்)

இணுவில் அறிவாலய 14 ஆவது ஆண்டு விழாவும் "கலாநிதி ஆறு திருமுருகன் மண்டபம்" பெயர்ப்பலகை திரை நீக்கமும் நாளை 16 ஆம் திகதி புதன்கிழமை மாலை 4.30 மணியளவில் இணுவில் அறிவாலயத்தில் அறிவாலயத் தலைவர் செ.சர்வேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், கௌரவ விருந்தினராக கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# "சின்மயநாதம்" வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.சின்மயா மிஷனின் காலாண்டு சஞ்சிகையான "சின்மய் நாதம்" வெளியீட்டு விழா தைப்பொங்கல் தினமான இன்று 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 4.30 மணிமுதல் 5.30 மணிவரை நல்லூர் சின்மயா மிஷன் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறும். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 200 | 180 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 60 | 60 | 80 |
| பச்சைமிளகாய் | 300 | 350 | 300 | 250 | 400 |
| தக்காளி | 100 | 130 | 120 | 70 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 100 | 80 | 40 | 60 |
| கோவா | 100 | 100 | 100 | 70 | 120 |
| கரட் | 120 | 140 | 120 | 100 | 160 |
| பூசணி | 40 | 50 | 20 | 40 | 60 |
| புடோல் | 100 | 100 | 80 | 70 | 100 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 140 | 100 | 120 | 110 | 160 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 | 75 | 80 |
| பாகற்காய் | 240 | 160 | 200 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 150 | 120 | 80 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 50 | 40 | 50 | 40 | 80 |
| பயற்றங்காய் | 220 | 240 | 200 | 150 | 160 |
| லீக்ஸ் | 140 | 140 | 160 | 110 | 160 |
| பீற்றூட் | 120 | 160 | 160 | 70 | 160 |
| கறிமிளகாய் | 250 | 200 | 200 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 800 | 1500 | 800 | — | 600 |
| போஞ்சி | 100 | 120 | 120 | 90 | 120 |
| கத்தரிதம்புள்ள | 160 | 150 | — | 130 | 160 |
| கீரை - 1பிடி | 40 | 20 | 40 | 40 | 40 |
| தேசிக்காய் | 180 | 200 | 100 | 110 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 40 | 40 | 30-50 |
| இராசவள்ளி | 140 | 150 | 160 | 140 | 160 |
| வெங்காயப்பூ | 200 | 180 | 200 | 190 | 200 |
| முள்ளங்கி | 50 | 50 | 80 | 30 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 50 | 20 | 50 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 15 | 20 |
| ஈரப்பலா | 60 | 80 | 50 | 110 | 60 |

# பொறுமைக்குப் பரிசாகவே அமைச்சுப் பதவி கிடைத்தது

## இராதாகிருஸ்ணன் பெருமிதம்

(கொழும்பு)

பொறுமைக்குப் பரிசாகவே தனக்கு அமைச்சு பதவி கிடைத்துள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவரும் விசேட பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சருமான கலாநிதி வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

அத்தோடு இந்த அமைச்சுப் பதவியினூடாக பல பாரிய அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்க தாம் எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மலையக பகுதிகளில் முன்னெடுக்கப்படவேண்டிய அபிவிருத்திகள் தொடர்பான கலந்துரையாடல் கூட்டம், நேற்று திங்கட்கிழமை நுவரெலியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள அமைச்சரின் காரியாலயத்தில் இடம் பெற்றது. இந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர், "நான் அமைச்சுப் பதவியை மாத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று நினைத்திருந்தால் எப்போதோ அதனை பெற்றுக்கொண்டிருப்பேன்.


ஆனால் எங்களுடைய மக்களுக்கு சேவைசெய்யக் கூடிய வகையில் அமைச்சை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற காரணத்தால் நான் பொறுமையாக இருந் தேன்.

அதற்கு ஏற்றவாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எனக்கு தற்பொழுது விசேட பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சை வழங்கியிருக்கிறார். இதன்மூலமாக எங்களுடைய மக்களுக்கான சேவையை முன்னெடுக்க முடியும் என்று நான் எதிர்பார்க்கின்றேன்.

எனக்கு கிடைத்திருக்கின்ற இந்த அமைச்சின் மூலமாக பெருந்தோட்ட பகுதிகளுக்கும், கிராமங்களுக்கும் நகர்ப்புறங்களுக்கும் அபிவிருத்திகளை மேற்கொள்ள முடியும்.

குறிப்பாக சுகாதாரம், கல்வி, பாதை அபிவிருத்தி, ஆலய அபிவிருத்தி மற்றும் சிறுவர் மகளிர் விவகாரம் ஆகிய துறைகளில் நிலவுகின்ற குறைபாடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படும்" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஒற்றுமையே எமது பலம் ஒன்றுபட்ட எமது செயல்கள் வளம் தரும் வாழ்வு தரும்



## நீதியரசர் விக்னேஸ்வரன் வாழ்த்து

"தை பிறந்தால் வழி பிறக்கும்" என்பார்கள்! ஆனால் இவ்வருடத் தொடக்கத்தில் வழிகள்யாவும்மங்கலாகவே தெரிகின்றன. அரசியல்யாப்பு தேர்தல்கள், ஜெனிவாக் கூட்டங்கள் எல்லாமே தமிழ் மக்களுக்கு மங்கலான பாதைகளையே காட்டி நிற்கின்றன. எமது வடகிழக்கு மாகாணத் தமிழ்ப் பேசும் மக்கள் கூட பல பல விதங்களில் பிரிந்தே காணப்படுகின்றனர். அரசியல் ரீதியாக, மத ரீதியாக, சமூக ரீதியாக இன்னும் பல வழிகளில் எமது மக்கள் பிரிந்தே நிற்கின்றார்கள்.

மேலும்அண்மையவெள்ளம் புகுந்து வெள்ளாமை அழிவடைந்த நிலையில் பல இடங்களில் எம் மக்கள் காணப்படுகின்றார்கள். இவ்வாறான சூழலிலே தான் ஆதவன் தைத்திருநாளில் மேலெழ உள்ளான். இதுவரை அவன் செய்த நன்மைகளுக்கு நாம் நன்றி செலுத்தும் இந் நன்னாளில் இனி வருங் காலத்தில் மங்கலான பாதைகளுக்கு ஒளியூட்ட அவனிடம் இறைஞ்சுவோமாக!

சூரியன் பாற்பட்டதே இவ்வுலகம். அவன் ஒளிக்கதிர்கள் எம்மேல் படாதொழிந்தால் எமக்கு வாழ்வில்லை. வளமில்லை, வாழ்க்கையுமில்லை. அவன் ஒளிபட்டால் வாழ்வு துலங்கும் வளம் பிறக்கும். வாழ்க்கை சிறக்கும். சிறந்ததொரு வாழ்க்கையை எம் அனைவருக்கும் இவ்வாண்டில்வழங்கிட அந்த ஆதவனை ஆர்வத்துடன் இந்த நன்னாளில் வேண்டுவோமாக!

தமிழர்கள் அனைவருக்கும் ஒருமித்த ஒன்றுபட்ட வாழ்க்கையைக் கொடுத்து நம்பிக்கையூட்டும் எதிர் காலத்தை அவர்களுக்கு அவன் அருள்வானாக! ஒற்றுமையே எமது பலம். ஒன்றுபட்ட எமது செயல்கள்வளம்தரும்வாழ்வு தரும். இந் நன்னாளில் எல்லோரும் இன்புற்றிருக்க ஆதவன் ஆசி வழங்குவானாக!

இனிய பொங்கல் நல் வாழ்த்துக்கள்!

**நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்**
**முன்னாள் முதலமைச்சர்,**
**வடமாகாணம்.**

# அரசியல் தீர்வின் ஊடாக எம் மக்களின் எதிர்காலம் வளமடைய பிரார்த்திப்போம்



## த.தே.கூ.தலைவர் சம்பந்தன் வாழ்த்து

இலங்கைவாழ் அனைத்து தமிழ் மக்களுக்கும் எனது இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

மனித வாழ்வின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கான இயற்கை வளங்களை அருளும் சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் இந்த உழவர் தின திருநாளில், தமது சொந்த நிலங்களில் குடியேற முடியாமலும் குடியேறிய நிலங்களில் பயிர் செய்ய முடியாமலும் உள்ள எமது மக்களின் துயரங்கள் நீங்க வேண்டும் என இறைவனை பிரார்த்திக்கிறேன்.

மேலும் சமத்துவம் மற்றும் நீதியின் அடிப்படையில் உருவாகும் ஒரு நியாயமான அரசியல் தீர்வின் ஊடாக எம் மக்களின் எதிர்காலம் வளமடைய இந் நன்னாளில் பிரார்த்தனை செய் வோமாக.

எமது மக்களின் நிலங்கள் அதிக விளைச்சலையும் செழிப்பையும் தந்து எம்மக்கள் தன்னிறைவுள்ள சமூகமாக மீண்டெழ எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்.

**இரா.சம்பந்தன்**
**தலைவர்- தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு**

# பொங்கல் திருநாள் தமிழர்களுக்கு புது வழியைப் பிறக்கச் செய்யட்டும்

## வாழ்த்துச் செய்தியில் டக்ளஸ் தேவானந்தா



தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். தமிழர்கள் வாழ்வில் தை பிறந்தாலும் வழிகள் பிறப்பதாக இல்லை. புதிய அரசியலமைப்பு வரைபும் தமிழர்களின் தீர்வுக்கு வழியை பிறக்கச் செய்யும் அரசியல் சூழல் தற்போதிருப்பதாகத் தெரியவில்லை என்று ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள தைப்பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில்,

போர் ஏற்படுத்திய வடுக்களும், பொருளாதாரச் சுமையுமாக வாழும் தமிழ் மக்களின் வாழ்க்கை வறுமையின் பிடியில் சிக்குண்டு கிடக்கின்றது. பொருளாதார ரீதியாக தமிழர்களின் வாழ்க்கையை உயர்த்திவிட உழைக்காதவர்கள், தொழில் வாய்ப்புகள் வேண்டாம், அபிவிருத்தி வேண்டாம், என்றும் பொங்கலுக்குத் தீர்வு, தீபாவளிக்குத் தீர்வு என்றும் கூறிக் கொண்டு காலத்தை விரயமாக்கிக்கொண்டு இருக்கின்றார்கள்.

தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிராகரித்து ஒருமித்த நாடு என்ற ஒற்றையாட்சிக்குள் தமிழ் மக்களின் அபிலாஷைகளை சட்ட ரீதியாக வலுவிழக்கச் செய்யவே முயற்சிக்கின்றார்கள். புதிய அரசியலமைப்பு வரைபானது தனி நபர்களின் சுயநல சுகபோகங்களுக்கு உடனடித் தீர்வைக் கொடுக்குமே தவிர, தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு நிலையான தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் என்று தமிழ் மக்கள் நம்பவில்லை.

தமிழ் மக்களை காலத்திற்குக் காலம் உசுப்பேற்றி தங்களின் அரசியல் நலன்களை முன்னிறுத்தி செயற்படுவோர், தொடர்ந்தும் இல்லாத ஊருக்கே வழிகாட்டுகின்றார்கள். அவர்கள் காட்டும் வழியில் தமிழ் மக்கள் போய்ச் சேர அங்கே ஒரு இலக்கில்லை என்பதையே பல தசாப்தங்களாக நாம் அவதானித்து வந்திருக்கின்றோம்.

வறுமையில் வாடுவோருக்கு தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தும், இயற்கை அழிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு காலம் தாழ்த்தாது நஷ்ட ஈடுகளைப் பெற்றுக்கொடுத்தும் துன்பத்திலிருந்து எமது மக்களை மீட்டெடுக்கப்படும் பொழுதே திருநாள் கொண்டாட்டங்கள் மகிழ்ச்சியுள்ளதாக அமையும்.

அதைவிடுத்து எமது மக்களின் அடுப்படியில் பூனைகள் தூங்கிக் கிடக்கும் வறுமையான வாழ்வில், பொங்கலும், ஏனைய பண்டிகைகளும் மகிழ்ச்சியானதாக அமையாது. எனவே பொருளாதார தன்னிறைவோடு மகிழ்ச்சியாக எமது மக்கள் வாழ்வதற்கு புதிய வழியை பிறக்கச்செய்யும் பொங்கலாக இந்தப்பொங்கலாவது அமையட்டும் என்றும் அந்த வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

# அன்பும் மகிழ்ச்சியும் பெருகிப் பிரவாகித்து நாட்டில் நல்லிணக்கம் ஏற்பட வேண்டும்

## ஜனாதிபதி வாழ்த்துச் செய்தி



"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என மகாகவி பாரதி பாடியதிலிருந்து தமிழர்கள் உழவுத் தொழிலுக்கு எத்தனை முன்னுரிமை அளித்துள்ளனர் என்பதை உணரக்கூடியதாக இருக்கின்றது. கமத்தை பிரதான வாழ்வாதாரமாகக் கொண்ட இயற்கையுடன் இணைந்த வாழ்க்கை முறையையே அவர்கள் கொண்டிருந்தார்கள் என்பதையும் இது புலப்படுத்துகின்றது.

அத்தோடுவாழ்வின்ஆதாரமான விவசாயத்திற்கு நீர், ஒளி, வெப்பம், காற்று ஆகியவற்றை உருவாக்க உதவிவரும்சூரிய பகவானுக்குநன்றி செலுத்தும்முகமாக உலகெங்கும்வாழும்தமிழர்கள்பண்டுதொட்டுகொண்டாடி வரும் தைப்பொங்கல் தினத்திற்கு எனது வாழ்த்துச் செய்தியை அனுப்பி வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

பால்பொங்கி வழிவதைப் போல் அனைவரது உள்ளங்களிலும் அன்பும் மகிழ்ச்சியும் பெருகிப் பிரவாகித்து நல்லிணக்கம் ஏற்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்புடனேயே தமிழ் மக்கள், தமது விளைச்சலினால் பெற்றுக்கொண்ட புத்தரிசி மற்றும் தானியங்களோடு தூய பாலும் சர்க்கரையும் கலந்து பொங்கி மகிழ்கின்றனர். பல இன, மத, கலாசார சமூகத்தைக் கொண்ட எமது நாட்டின் கலாசார பன்மைத்துவத்தின் செழுமைக்கு இத்தகைய பண்டிகைகள் சிறந்த வாய்ப்பாக அமைகின்றன என்பதே எனது நம்பிக்கையாகும்.

"தை பிறந்தால் வழி பிறக்கும்" என்பது நமது சகோதர தமிழ் மக்கள் மத்தியில் இருந்துவரும் உறுதியான நம்பிக்கையாகும். அந்த நம்பிக்கைக் கூடும் வகையில் மலர்ந்தி ருக்கும் இப்புத்தாண்டு அவர்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேற வழி வகுக்கும்ஆண்டாக அமைய வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும்.

இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையிலான வலிமையான உறவினை மென்மேலும் மெருகூட்டும் வகையிலும் தமிழ் கலை, கலாசாரத்தினை வெளிப்படுத்தும் வகையிலும் தைத்திருநாளைக் கொண்டாடி மகிழும் இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கும் உலகெங்கிலும் வாழும் தமிழர்களுக்கும் எனது இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மைத்திரிபால சிறிசேன**
**ஜனாதிபதி**

# திசைகள் எங்கும் ஒளி பெற்று வளம் பெற நேரான எண்ணங்கள் உதிக்கட்டும்



உலக உழவர்களுக்கு உயிரூட்டிய கதிரவனுக்கு தைப்பொங்கல் திருநாளில் அனைவரும் இணைந்து நன்றி செலுத்தும் பொன்னாளில் படைத்தவனுக்கு அறுவடையாக புதிதாய் நாம் பெற்றதை சூரிய பகவானுக்கு உவந்தமுதளிக்கும் திருநாளாகிய தைத் திருநாளில் எல்லோரும் மகிழ்ச்சி பொங்க இப் புதிய ஆண்டையும் வரவேற்று பரஸ்பர புரிந்துணர்வோடு நாம் இவ் வையகத்தில் பெற்றவற்றை அனைவரும் சமத்துவமான வகையில் பெற்றிட மகிழ்வுடன் அதன் சுவையை தித்திக்கும் பொங்கலாக அனைவருக்கும் வழங்குவோம்.

ஏர்பூட்டி உணவளிக்கும் உழவர்களை போன்று விவசாய பெருமக்களை போல் சிறந்த விதைகளை விதைத்து நாட்டு மக்களுக்காக அறுவடைகளை எதிர்பார்த்து காத்திருக்கும் உங்களில் நானும் ஒருவன்.

நாட்டு மக்கள் அனைவரும் எமது தன்னிறைவுக் காக தளராது அனைவரும் கை கோர்த்து உழைத்திடும் இப் பொன்னான திருநாளில் மகிழ்ச்சி பொங்க எனது வாழ்த்துக்களையும் வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். எமது ஆரம்ப மகிழ்ச்சியும் நிலையான மாற்றத்திற்கு வித்திடட்டும்.

நமது பாரம்பரியமான வரலாற்றில் வரவேற்றல் விருந்தோம்பல் நன்றி செலுத்துதல். அவற்றை நீண்ட நெடுங்காலமாக நாம் அனைவரும்பின்பற்றிவருகின்றோம்

நமது பாரம்பரியங்கள், இதிகாசங்கள், வரலாறுகளில் இருந்து பல்லின, மற்றும் பன்மைத்துவ அடையாளங்களை நவீனயுக சந்ததியினர் கடைப்பிடித்து கொள்ளக் கூடிய வகையில் கலாசார நிகழ்வுகளின் ஊடாக கூட்டு பரிமாணங் களை ஏற்படுத்தி அவற்றை நாம் அடைந்து கொள்ள எமது நடைமுறை செயற்பாடுகள் அமைய வேண்டும்.

மறை எண்ணங்களாக அன்றி ஒளி கதிர்கள் இந் நன்னாளில் இருந்து பரந்தளவில் ஒளி பரவட்டும். நமது எண்ணங்கள் சுவை பெறட்டும்.

**அங்கஜன் இராமநாதன்**
**பாராளுமன்ற உறுப்பினர்**

# தை பொங்கலோ! பொங்கல்!

## யாழ்.மாநகர முதல்வர் வாழ்த்து



பொங்கும் மங்களம் எங்கும் நல்குக. பொங்கல் பண்டிகை தமிழர் திருநாளாகும். பொங்கல் என்பது அர்ப்பணத்திற்குரிய நன் நாளாகும்.

இயற்கையுடன் ஒட்டி வாழ்ந்தான் தமிழன் என்பதை பிரதிபலிக்கும் நன் நாளாகும்.

"தைபிறந்தால் வழி பிறக்கும் என்பர்"எம் ஆன்றோர். அதுபோல் இன்று எம்மைப் பீடித்திருக்கும் துன்பங்கள் நீங்கி! அனைத்தும் இன்பமாய் மிளிர வேண்டும் என் பதே எமது எண்ணமாகும்.

தைத்திருநாள் உழவரின் திருநாளாகவே பன்நெடுங்காலமாக கொண்டாடப்பட்டு வருவதை வரலாற்று ரீதியாக அறியக் கிடைக்கிறது.

இதைத் தொடர்ந்துவரும் பட்டிப் பொங்கல் உழவர்கட்கு எல்லாவழியிலும் உதவும் ஆ நிரைகட்கு நன்றி செலுத்தும் திருநாளாக அமைவு பெறுகின்றது.

பொங்கல் விழா நன்றியின் விழா - இன்று இவ் விழா பரிணமித்துள்ளது.

தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் கொண்டாடப் பட்டு வருவதில் இருந்து இவ் விழாவின் சிறப்பை யும், மகிமையையும், வாழ்த்த வேண்டியவராய் உள்ளோம். பிறக்கும் இத் தைப் பொங்கல்விழா சகலசௌபாக்கியம் நிறைந்த பொங்கலாக அமையட்டும், வீடு சிறக்க, நாடு சிறக்க உலகில் அன்பும், சமாதானமும் நிலவ வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**இம்மானுவல் ஆனல்ட்**
**முதல்வர்,**
**யாழ்.மாநகர சபை.**

# தேர்தல் ஆணைக்குழுவால் மகிந்தவை நிராகரிக்க முடியாது

## குமார வெல்கம தெரிவிப்பு

(பத்தரமுல்ல)

**ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளராக மகிந்த ராஜபக்ஷவை தாம் பரிந்துரைப்பதாக தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம, அவர் வேட்பாளராக முன்னிலைப்படுத்தப் பட்டால் அதனை தேர்தல் ஆணைக்குழுவால் நிராகரிக்க முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.**



பத்தரமுல்லையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் புதிய அரசியல் அமைப்பில் சமஷ்டி பண்புகள் முன்னிலை பெறுமாயின் அதற்கு தாம் ஆதரவளிக்கப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

புதிய அரசியலமைப்பு தொடர்பில் தமிழ் அரசியல் பிரமுகர்கள் உள்ளிட்ட நாட்டின் பல்வேறு தரப்பினரும் பல கருத்துக்களை முன்வைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சப்ரகமுவ பல்கலைக்கழக வைத்திய பீடம் ஆரம்பம்

(கொழும்பு)

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் வைத்திய பீடம் நாளை மறுதினம் 17ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

அதேவேளை இரத்தினபுரி வைத்தியசாலை போதனா வைத்தியசாலையாக தரமுயர்த்தும் நிகழ்வும் அன்றைய தினம் இடம் பெறவுள்ளது.

குறித்த தினத்தில் வைத்திய பீட மாணவர்கள் 75 பேர் இணைத்துக் கொள்ளப்பட உள்ளனர் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் டி சில்வா தெரிவித்துள்ளார்.

மருத்துவ கற்கை நெறியைத் தொடரும் மாணவர்களுக்கு சகல வசதிகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)

# உழுந்து இறக்குமதி வரி அதிகரிப்பு

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் உழுந்துக்கான வரியை அதிகரிக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அதன்படி இறக்குமதி செய்யப்படும் ஒருகிலோ உழுந்துக்கு விதிக்கப்பட்டிருந்த 125 ரூபா வரி 200 ரூபா வரை அதிகரிக்கப்படவுள்ளது.

உள்நாட்டு உழுந்து பயிர்ச் செய்கையாளர்களை பாதுகாக்கும் நோக்கில் அரசு இந்த வரி அதிகரிப்பை மேற்கொண்டுள்ளதாக ஹெக்டர் கோபகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தில் சிரேஷ்ட விவசாய பொருளாதார நிபுணர் துமிந்த பிரியதர்ஷன தெரிவித்துள்ளார். (7)

# நாட்டை நாசம் செய்தது ரணிலா? மகிந்தவா?

## பந்துல கேள்வி



(கொழும்பு)

பிரதமராகக் கடமையாற்றிய ஐம்பது நாட்களில், மகிந்த ராஜபக்ஷ, இந்த நாட்டை நாசம் செய்தாரா? இல்லை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இந்த நாட்டை நாசம் செய்தாரா என்பது தொடர்பில், நாடாளுமன்றத்தில் இரண்டு நாட்கள் விவாதமொன்றை நடத்த வேண்டுமெனக் கோரிய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் எம்.பி.பந்துல குணவர்த்தன, அரசாங்கத்தின் தொடர் போலிப் பிரசாரங்களால், சர்வதேசக் கடனுதவிகள் தடைபடும் ஆபத்து இருப்பதாகவும் தெரிவித்தார்.

கொழும்பு - புஞ்சி பொரளையில் உள்ள, வஜிராஷ்ரம பௌத்த மத்திய நிலையத்தில், நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதியும் எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ஷவின் 50 நாள் குறுகிய அரசாங்கமே, இந்நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டமைக்குக் காரணமென, நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்திருக்கும் கருத்து, முட்டாள்தனமானதெனத் தெரிவித்தார்.

குறித்த ஐம்பது நாட்களில், 8 பில்லியன் டொலர்களை மகிந்த ராஜபக்ஷ நாசம் செய்துவிட்டாரென, பத்தரமுல்லையில் நடைபெற்ற நிகழ்வொன்றின் போது, பிரதமர் தெரிவித்ததைச் சுட்டிக்காட்டிய பந்துல எம்.பி, பிரதமரின் இந்தக் கருத்து, முற்றிலும் பொய்யானது என்றார்.

கடந்த 2018ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசெம்பர் மாதம் வரையான வெளிநாட்டுக் கையிருப்பு தொடர்பில், இலங்கை மத்திய வங்கி, உடனடியாக அறிக்கையொன்றை வெளியிட வேண்டுமெனவும் இதன் மூலம், வெளிநாட்டுக் கையிருப்பு தொடர்பான உண்மையைக் கண்டறிய முடியுமெனவும் சுட்டிக் காட்டிய அவர், அரசாங்கத்தின் போலிப் பிரசாரங்கள் தொடருமாயின், சர்வதேச நாடுகளின் கடனுதவிகள் தடைப்படும் ஆபத்து ஏற்படுமென எச்சரித்தார்.

மேலும், ஜனாதிபதி வேட்பாளராக, ஜனாதிபதிப் பதவி வகிக்காத ஒருவரைத் தெரிவு செய்வதே வழக்கமெனவும் சுட்டிக்காட்டிய பந்துல குணவர்த்தன, ஜனாதிபதி வேட்பாளராக யாரைக் களமிறக்கப் போகிறார்கள் என்ற எதிர்பார்ப்பை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி, நாட்டின் பொருளாதாரப் பிரச்சினையை மூடி மறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் குற்றம் சாட்டினார். (இ-7)

# ஏப்ரல் மாதத்திற்கு முன்னர் தேர்தலை நடத்த முடியாது

## தேர்தல் ஆணையம் தெரிவிப்பு




(கொழும்பு)

மாகாணசபை தேர்தலை எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்கு முன்னர் நடத்த முடியாதென தேர்தல் ஆணையம் தகவல் வெளியிட்டுள்ளது.

மாகாண சபை தேர்தலை நடத்துவது தொடர்பில் தொடர்ந்தும் இழுபறி காணப்படுகின்ற நிலையில், இது குறித்து கருத்து தெரிவித்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

அத்துடன், சட்ட ரீதியான சிக்கல்களை நிவர்த்தி செய்தாலும்கூட ஏப்ரல் மாதத்திற்கு முன்னர் மாகாணசபை தேர்தலை நடத்த முடியாதென்றும் அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் மாகாணசபைத் தேர்தலுக்கு தயாராகுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அமைப்பாளர்களுக்கு அறிவுறுத்தியிருந்தார்.

அத்தோடு மாகாண சபைகளின் பதவிக்காலம் முடிந்த பின்னரும், அவற்றுக்குத் தேர்தலை நடத்தாமல் இருப்பது அரசியலமைப்பை மீறுகின்ற செயல் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

# பொங்கல் பண்டிகையை முன்னிட்டு களைகட்டியது மலையகம்



(ஹற்றன்)

தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு நாட்டின் பல பகுதிகளில் தைப்பொங்கலுக்கான தயார்ப்படுத்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அந்த வகையில் மலையகத்திலும் தைப்பொங்கல் களைகட்டியது.

தைத் திருநாளினை கொண்டாடுவதற்கு மலையக மக்களும் நேற்றையதினம் ஆயத்தங்களை மேற்கொண்டனர்.

அந்த வகையில் பொங்கல் தயாரிப்பதற்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் மற்றும் பூஜை பொருட்களையும் கொள்வனவு செய்வதில் மக்கள் மும்முரமாக ஈடுபட்டனர்.

மேலும் தைத்திருநாளினை முன்னிட்டு இந்துக்கள் வீடுகளை சுத்தம் செய்வதோடு, வீடுகளை அலங்கரிக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர். (7)

# கிழக்கு பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம்

## வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியத்தலைவர் தெரிவிப்பு

(ஏறாவூர்)

கிழக்கு மாகாணத்திலுள்ள பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்படுமென கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் உறுதியளித்துள்ளதாக அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியத்தின் தலைவர் ஜெஸீர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண பட்டதாரிகளுக்கு பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்குமாறு ஆளுநரிடம் விடுத்த வேண்டுகோளுக்கமைய இவ் உறுதிமொழியை வழங்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

பட்டதாரி ஆசிரியர் நியமனத்திற்கு திறந்த போட்டிப் பரீட்சைக்கு கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் தோற்றி சித்தியடைந்துள்ளவர்களுக்கு இவ் ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஏனைய வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரச திணைக்களங்களில் வெற்றிடங்களை உருவாக்கி நியமனம் வழங்கப்படுமெனவும் ஆளுநர் தெரிவித்துள்ளதாக அவர் கூறினார்.

வேலையற்ற பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் மற்றும் அரச திணைக்களங்களில் நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ள மாகாண ஆளுநருக்கு அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியம் பாராட்டுத் தெரிவித்து கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியத்தின் தலைவர் தெரிவித்தார். (இ-7)

# பொங்கல் சிறப்பு மலர் 2019



### அருளாசிச் செய்தி

இன்று தைத்திருநாள். இன்றைய நாள் ஒரு பொன்னான நன்னாள். தைப்பொங்கல் பொங்கிப் படைத்து வழிபாட்டியற்றும் சிறப்பான பெருநாள்.

இந்தத் தைப்பொங்கல் தமிழர்களின் தனித்துவமான ஒரு பண்டிகையாகும். இனிப்பான பால், சீனி, கற்கண்டு, சர்க்கரை, தேன், பேரீச்சம்பழம், நெய் எல்லாம் போட்டு சூரியனுக்குப் பொங்கிப் படைத்து வழிபடும் இந்த நாள் ஒரு நல்ல திருநாளாகும்.

நெல் மணிகள் உற்பத்திக்கு உதவிய சூரிய பகவானுக்கு புதுப்பானையிலே புதுப் பொங்கலிட்டு வணங்கி நிற்கும் திருநாள் இன்றாகும். நன்றி செலுத்தும் பாங்கில் அமையும் தைப்பொங்கல் விழா சிறக்க வேண்டும் என்று நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து வாழ்த்துகின்றோம்.

இன்றைய தைப்பொங்கல் எல்லோருக்கும் நன்மை பயக்கும் பண்டிகையாக அமைய வேண்டும் என்று சிந்தித்து வந்தித்துச் சேவித்து அருளாசி நல்கி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்,**
**ஆதீன குருமுதல்வர்**
**இரண்டாவது குருமகா சந்நிதானம்,**
**நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்,**
**யாழ்ப்பாணம்.**



### தமிழ் கூறும் நல்லுலகினிற்கு இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்

அன்பார்ந்த தமிழ் மக்கள் அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள். பரந்து விரிந்து உலகெங்கும் வாழும் தமிழ் இனம் ஒன்றுபட்டு குதூகலமாக கொண்டாடும் சிறப்புமிகு திருநாள் தைப்பொங்கல் பண்டிகையாகும். தமிழினத்தின் முதன்மைக் கொண்டாட்டம் தைப்பொங்கல் ஆகும். எமது கலை, கலாசார விழுமியங்களை பிரதிபலிக்கின்ற விழாவாகவும் இது அமைகின்றது. தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். தமிழ் இனம் இழந்த அத்தனைகளுக்கும் நீதி கிடைத்திடவேண்டும். எமது வாழ்வின் முதுகெலும்பாக திகழ்பவர்கள் விவசாயிகள். கடந்த காலத்தில் குறிப்பாக வன்னிப்பெருநிலப்புவாழ் விவசாயிகள் இயற்கையினால் பெரும் துன்பத்தினை அடைந்திருக்கின்றார்கள். இவர்களது வாழ்வின் உயர்விற்கு இறைவன் வழிசமைக்க வேண்டும். பொங்கல் பானையில் இடப்படும் அரிசிமணிகள் ஒவ்வொன்றும் தமிழ் மக்களின் நல் எண்ண அபிலாசைகளாக அமைந்திட வேண்டும். அவை அனைத்தும் வெற்றிகளாகவும் சாதனைகளாகவும் விடுதலையாகவும் பொங்கி மகிழ்வைத் தரவேண்டும். இன்பத்திலும் துன்பத்திலும் எமது அன்பினை சகோதரத்துவ உணர்வுடன் பகிர்ந்து கொள்வோம். ஒன்றுபட்டு மகிழ்வோம். தைப்பொங்கல் அனைவருடைய வாழ்விற்கும் நல்வழியைக்காட்டட்டும். அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் நல்லாசிகளை இறையருள் துணைநிற்க தெரிவித்து அமைகின்றேன்.

**சிவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள்**
**குருமுதல்வர், வீணாகான குருபீடம்,**
**ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் உபதேச**
**திருக்கோவில், சண்டிலிப்பாய்.**



### பொங்கல் தின நல் ஆசிகள்

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் வாரீர்" என்கின்ற நற்செய்தியுடன் பொங்கல் திருநாளை வரவேற்போமாக.

பழம்பெரும் விழாவாகிய தைப்பொங்கல் நன்னாளில் சூரிய பகவானை போற்றி வணங்குவதற்குரிய புண்ணிய திருநாளாகவே நாம் கடைப்பிடிக்கின்றோம். தேவர்களுக்குரிய பகற்பொழுதின் ஆரம்ப நன்னாள் தைப்பொங்கல் நாளாகும்.

தைப்பொங்கல் நன்னாளில் அதிகாலையில் நீராடி, ஆலயம் சென்று இறைவனை வணங்கிய பிற்பாடு எமது இல்லங்களில் சூரிய பகவானுக்கு பொங்கல் பொங்கி படைத்து மகிழ்கின்றோம்.

"தை பிறந்தால் வழி பிறக்கும்" என்கிற முதுமொழிக்கு அமைவாக அனைத்து இன மக்களின் பூரண ஒத்துழைப்புடன் தமிழ் மக்களின் நீண்டகால எதிர்பார்ப்புக்கள் கிடைக்க இறைவனைப் பிரார்த்தித்து நல் ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"**
**சிவஸ்ரீ பரமேஸ்வர மனோகரக் குருக்கள்,**
**(முன்னாள் தலைவர், சர்வதேச இந்து குருமார் ஒன்றியம்)**



### யாழ்.ஆயரின் பொங்கல் வாழ்த்து

தமிழ் மக்களின் நன்றிப் பெருவிழாவான பொங்கல் விழா உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழ் மக்களால் கொண்டாடப்படும் வேளை இவ்விழாவை கொண்டாடும் அனைவருக்கும் நீங்கள் எங்கிருந்தாலும் 2019 ஆம் ஆண்டிற்குரிய பொங்கல் தின விழா வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்வடைகிறோம்.

பொங்கல் விழா நன்றியின் விழா. நம்மை என்றும் நன்றி கூறிக்கொண்டே இருக்க அழைப்பு விடுக்கும் விழா. நம்மைத் தாங்கும் நிலம் நமக்குத் தருகின்ற அனைத்து பயன்களுக்கும் நன்றி சொல்லும் விழா. முதல் விளைச்சலை இறைவனுக்கும் இயற்கைக்கும் காணிக்கையாக்கும் விழா.

பொங்குக நன்றியால் பொங்குக-இறைவன் அளித்த தரையை எண்ணி - தரையளித்த விளைவை எண்ணி - பொங்குக நன்றியால் பொங்குக என இந்த விழாவை மகிழ்வோடு கொண்டாடுவோம்.

அரசியல் தீர்வுக்கு அடித்தளமாக பார்க்கப்படும் புதிய அரசமைப்பு சுதந்திர தினத்திற்கு முன்னர் சமர்ப்பிக்கப் படவுள்ளது. இது பற்றி பலரும் பலவிதமான சாதக,பாதக கருத்துக்களை தெரிவிக்கின்றனர். இனவாத சிந்தனையை தூண்டாது கடந்த கால வரலாற்றை மனதிற் கொண்டு இலங்கை வாழ் மக்கள் என்ற சிந்தனையுடன் செயற்படும்படி பாதக கருத்துக்களை தெரிவிப்போருக்கு அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம். இலங்கையில் நிலவும் நீண்டகால இனப்பிரச்சினைக்கு இந்த ஆண்டு தீர்வு கண்டே ஆக வேண்டும். பிளவுபடாத இலங்கை நாட்டுக்குள் சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற மூவின மக்களும் ஏற்கும் விதமாக இது அமைய வேண்டும்.

அரசமைப்பில் உறுதிப்படுத்தப்பட்ட மாற்றப்பட முடியாத நீதியோடு கூடிய நிரந்தர அதிகாரப் பகிர்வை இந்த அரசு வழங்க வேண்டும். எல்லா தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் நியாயமானதாக இது அமைய வேண்டும்.

இது போன்ற ஒரு சந்தர்ப்பம் இனி ஏற்படும் என எதிர்பார்க்க முடியாது. தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் இந்த இறுதிச் சந்தர்ப்பத்தை இலங்கை நாட்டை உண்மையாகவே நேசிக்கும் சிங்கள, தமிழ், முஸ்லிம் தலைவர்கள் அனைவரும் தக்க முறையில் பயன்படுத்த வேண்டும் என இலங்கை வாழ் அனைத்து மக்கள் பெயராலும் அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம். வடமாகாண புதிய ஆளுநராக நியமிக்கப்பட்ட தமிழரான கலாநிதி சுரேன் ராகவன் அவர்களை அன்புடன் மகிழ்வோடு வரவேற்கிறோம். இவ்வாண்டில் நடக்கப் போகும் விடயங்களை நம்பிக்கையோடும் இறையாசீருடனும் வரவேற்க வாழ்த்துகிறோம்.

**மேதகு கலாநிதி யஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை, யாழ்.ஆயர்**






### "நோக்கம் சரியானால் ஆக்கம் தானே வரும்..."

பொங்கல் விழா அன்பையும் பாசத்தையும் தர்மத்தையும் வளர்க்கும் விழா. நாம் எந்த தர்மம் செய்தாலும் கொடுப்பதை அன்போடு கொடுக்க வேண்டும். ஒருவருக்கு தண்ணீர் கொடுப்பது கூட அன்போடு கொடுத்தால் குடிப்பவர் தாகம் தணிந்ததும் அவருடைய நன்றி மிகுந்த பார்வை கொடுத்தவருக்கு மனநிறைவைத்தருகிறது. அன்பாக பேசிக்கொண்டே பரிமாறும் பொழுது சாப்பிடுபவர் அன்பின் மிகுதியால் இரட்டிப்பு உணவு உட்கொள்ளுவதும்நாம்நடைமுறையில்பார்க்கலாம்.

இயற்கை தன்னுடைய கடமைகளைத் தவறாமல் செய்கிறது. ஆனால் இயற்கையை வணங்காமல், இயற்கையின் சமநிலையை அழிக்கும் விதமான காரியங்கள் தொடர்ந்து செய்யப்பட்டு வரும்பொழுது இயற்கை அன்னையின் சீற்றம் வெளிப்படுகிறது. புயலாகவும் நெருப்பாகவும் பூமி அதிர்வாகவும் அந்த வெளிப்பாடு உள்ளது.

கண்ணிருக்கலாம் கண்டதையும் பார்க்கக்கூடாது. காதிருக்கலாம் கண்டதையும் கேட்கக்கூடாது. வாயிருக்கலாம் கண்டதையும்பேசக்கூடாது. உரலிருக்கலாம் உள்ளமிருக்கலாம் உணர்விருக்கலாம் கண்டதையும் நுகரக் கூடாது. இப்படி நோக்கத்தை நல்வழிப்படுத்தினால் வாழ்வில் ஆக்கம் தானே வரும்.

நோக்கத்தை நல்வழிப்படுத்தும் ஆற்றல் மனதிற்கு உண்டு. மௌனம் கடைப்பிடிக்க மனம் ஒடுங்கும். அடங்கும் மனத்திற்கு என்றுமே அமைதியும் மதிப்பும் உண்டு.

இத்தகைய அமைதியையும் பிறர் மதிப்பினைப் பெறும்படியான உயர் நிலையையும் இந்தப் பொங்கல் திருநாளில் அனைவரையும் வாழ்த்துகின்றோம்.

"சர்வே ஜனகா சுகினோ பவந்து"

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

**சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிகதேசிகர், JP**
**இந்துமதகுரு பீடாதிபதி, பிரதமகுரு, வல்வை**
**ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்,**
**வல்வெட்டித்துறை, தர்மகர்த்தாவும்**
**ஆதீனகர்த்தாவும், புற்றளை சித்திவிநாயகர் கோவில்.**



### செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி

தைப்பொங்கல் திருநாள் சைவத்தமிழர்களின் திருநாள். இயற்கையை தெய்வமாக வழிபட்ட எம் முன்னோர் ஒளி தருகின்ற கதிரவனுக்கும், உணவுதருகின்ற உழவனுக்கும் நன்றி செலுத்தும் நாளாக இத்திருநாளைக் கருதிக் கொண்டாடினார்கள். மனிதவாழ்வில் நாம் வசிக்கும் உறைவிடமாகிய வீடு முக்கியத்துவம் பெறுகிறது. நல்லதோர் வீட்டில் வசிப்பது கூட இறைவரம். எனவே நாம் வசிக்கும் வீட்டைப் புனிதப்படுத்தி பொங்கல் நாளில் பொங்கிப்படைத்தல் தெய்வீகக் கடமையாகும். வருடம் முழுவதும் உண்பதற்கு உதவும் தெய்வங்களுக்கு நாம் நன்றி சொல்லவேண்டியது தலையாய கடமையாகும். அனைத்து வீட்டுவாசலிலும் தைப்பொங்கல் நாளில் பொங்கிப் படைத்து வழிபாடு செய்யுங்கள். தாய்,தந்தை மூத்தோர் பாதங்களில் பணிந்து வணங்கி நல்லாசிகளை பெறுங்கள். உற்றார், உறவினர், நண்பர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்து அன்பை பெருக்குங்கள். எம் மண்ணில் நிரந்தர விடிவு கிடைக்கப் பிரார்த்தியுங்கள். அரசியல் கைதிகளின் விடுதலைக்காக கடவுளை வேண்டுங்கள். வைத்தியசாலைகளில் நோய்களினால் துன்புறும் அன்பர்கள் இந்தநாளில் நலம் பெறப் பிரார்த்தியுங்கள். அனைவர் வாழ்வும் சிறக்க அனைவரும் ஒன்றுபட்டுப் பிரார்த்திப்போம். அன்பர்கள் அனைவருக்கும் எனது இதயபூர்வமான நல்லாசிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து அமைகிறேன்.

**கலாநிதி.ஆறு.திருமுருகன்**
**தலைவர்-ஸ்ரீ துர்க்காதேவி**
**தேவஸ்தானம்,தெல்லிப்பழை.**
**தலைவர்-சிவபூமிஅறக்கட்டளை.**



### சர்வதேச இந்து குருமார் ஒன்றிய தலைவரின் ஆசிச் செய்தி

பொங்கல் இனிமையானது. பொங்கல் நிகழ்வு சந்தோசமானது. அதுபோல் இன்று தைப்பொங்கல் நாள் முதலாக தமிழ் மக்கள் மகிழ்வாக வாழ நாம் ஒவ்வொருவரும் சூரிய தேவரை பிரார்த்திப்போம்.

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தீரட்டும். சைவ தமிழ் கலாசாரங்கள் இவ் ஆண்டும் தொடர பேண முயற்சிப்போம்.

தமிழரின் பொருளாதார மற்றும் விவசாய வளம் மேன்மை அடைய பிரார்த்திப்போம். இறைமையின் அருளால் அனைத்து மக்களும் துன்பம் இன்றி வாழவும் உயர் நிலை அடையவும் பிரார்த்திப்போம். எல்லோரும் நற்பணிகளிலும் தெய்வீக பணிகளிலும் இணைகின்றோம்.

அனைவருக்கும் நல் ஆசிகளும் வாழ்த்துக்களும்.

**கு.ஜெகதீஸ்வரக் குருக்கள்**
**தலைவர், சர்வதேச இந்து குருமார் ஒன்றியம்.**

### கலாசார அடையாளங்களைப் பேணி தலைநிமிர்ந்து வாழவேண்டும்!

மலரும் தைப்பொங்கல் திருநாள், தமிழர் வாழ்வில் நல்லதோர் விடியலைத்தரவேண்டும் என்ற எண்ணமே மனமெங்கும் பொங்கிநிற்கின்றது. தமிழ் மக்களின் பண்பாட்டினை, பாரம்பரியத்தை, நன்றி கூரும் பண்பினை வெளிப்படுத்தும் தனிப்பெரும் அடையாளமாகத் திகழ்வதே "பொங்கல் விழா" ஆகும்.

அவ்வாறான,தமிழர் புராதனவிழாவான தைப்பொங்கல் என்னும் உன்னதமான இன்றையதினத்தில், இந்த உலகமே இயங்குவதற்குத் தேவையான, உணவு உற்பத்திக்கு உறுதுணை செய்யும் சூரியபகவானுக்கும், இயற்கைக்கும், பசுக்கள், காளைகள் என்பவற்றுக்கும் நன்றி செலுத்தும் ஒரு பண்பாட்டைத் தொன்றுதொட்டுக் கொண்டாடி வருகின்றோம். இந்த சூரியக் குடும்பத்தின் இயங்கு சக்தியாகத் திகழ்வது சூரியனே! இச் சூரியசக்தியனாலேயே இப்புவியிலுள்ள சகல ஜீவராசிகளும் சக்தி பெற்று உயிர் வாழ்கின்றன. பயிர்கள் செழிக்கின்றன. அத்துணை சக்திவாய்ந்த, உணவு உற்பத்திக்கு மூல சக்தியாக உதவும் சூரியனுக்கு நன்றி செலுத்த வேண்டியது நமது ஒவ்வொருவரினதும் கடமை. பொங்கலன்று வீட்டின் முற்றத்தில் பசுஞ்சாணத்தினால் மெழுகி, அரிசிமாக்கோலமிட்டு, புது மண்பானைவைத்து, அறுவடைசெய்யப்பட்ட புதிய அரிசியைக் கொண்டுபொங்கி, முக்கனிகளுடன் கரும்பும் பாலுந் தேனும் படைத்துச் சூரியனுக்கு நன்றி செலுத்தி வணங்க வேண்டும்.

இத் தினத்தில், உலகெங்கும் வாழும் தமிழ் மக்களுக்கு எமது உளம் கனிந்த தைப்பொங்கல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**மா.தவயோகராஜா, தலைவர்.**
**வே.கந்தசாமி, பொதுச் செயலாளர்.**

# பொங்கல் சிறப்பு மலர் 2019













# பொங்கல் சிறப்பு மலர் 2019









# பொங்கல் சிறப்பு மலர் 2019


















# பொங்கல் சிறப்பு மலர் 2019






# பொங்கல் சிறப்பு மலர் 2019


வடக்கு மாகாணத்தில் புகழ் பூத்த ஈ-சிற்றி ஆங்கிலக் கல்லூரியில் புதிய பாடநெறிகள் ஆரம்பம்

**DIPLOMA IN ENGLISH**
(03 மாதங்கள் & 06 மாதங்கள்)

A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள், மற்றும் 16 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்குமான பாடநெறி

O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு 03 மாத பாடநெறி

IELTS
IELTS LIFE SKILL A1
Diploma in Sinhala
Diploma in computer

ஆரம்பம் : 19.01.2019 காலை 10.30 மணி
(வார இறுதி நாட்களில் நடைபெறும் பாடநெறி)

TVCE (Tertiary and Vocational Education Commission) அங்கீகாரம் பெற்ற ஆங்கில, சிங்கள மற்றும் கணனி பாடநெறிகள், சான்றிதழ்கள்.
(வேலை வாய்ப்புகளின் போது அதிகூடிய அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள்)

வடக்கு மாகாணத்தில் பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் ஒரே தெரிவு

**E-CITY**
COLLEGE OF ENGLISH &
IT SKILLS DEVEVOPMENT
இல. 372D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம் (வீரமாகாளி அம்மன் கோவில் அருகில்)
0212217106/0773400418/0770615242/0774924166
web: www.ecitycollege.lk



**கிரிக்கணேஷ்**
மூக்குக் கண்ணாடியகம்

நவீன ரக மூக்குக் கண்ணாடிகளை மிகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள தேர்ந்த ஒரே ஸ்தாபனம்



நவீன ரக மூக்குக் கண்ணாடிகளை மிகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளதேர்ந்த ஒரே ஸ்தாபனம்

564, 566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P. 021 222 2486
கிளைகள்:-
பழைய பொலிஸ் நிலையம் முன்பாக,
இல. 80, கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்.

இல. 91, கே.கே.எஸ். வீதி,
கொக்குவில் சந்தி,
கொக்குவில்.



# கிருபா லேணர்ஸ்
## சாரதி பயிற்சிப் பாடசாலை

- ஆண், பெண் இருபாலாருக்கும் (AUTO GEAR AND MANUAL) வாகனப் பயிற்சி.
- பெண்களுக்கு நவீன காரில் பெண் பயிற்சியாளர்களால் பயிற்சி.
- விசேட வீடியோ வகுப்புக்கள்.
- விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- தவணை முறைக் கட்டண வசதி.
- விரும்பிய நேரத்தை தெரிவு செய்யும் வசதி.
- இரவு நேர வாகனப் பயிற்சி.
- அனுபவம் வாய்ந்த பயிற்சியாளர்களால் மும்மொழிகளிலும் பயிற்சி.



226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 - 222 - 4353
021 - 492 - 3200
077 - 722 - 5292

A9 வீதி, கிளிநொச்சி.
(கச்சேரி முன்பாக)
021 - 228 - 5505
071 - 454 - 6955

இல.216, A9 வீதி,
வவுனியா
(வசந்தி திரையரங்கு முன்பாக)
024 - 222 7777
0777 - 100 - 444

இல.227/6,
கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
(மதவடி அண்மையில்)
021 - 224 - 2022
071 - 454 - 6956

பிரதானவீதி,
சித்தன்கேணி.
076 212 1299,
021 225 2500

கண்டி வீதி,
சாவகச்சேரி.
021 - 227 - 0700
021 - 492 - 3202

விக்னேஸ்வரா,
கல்லூரி வீதி, நெல்லியடி.
021 - 300 - 6550
071 - 454 - 6957

இல.94, பிரதான வீதி,
மன்னார்.
071 - 988 - 7699,
077 - 847 - 2732

வாடியடி சந்தி,
பூநகரி.
021 - 320 - 1818,
071 - 454 - 6955

நாச்சிக்குடா சந்தி,
மன்னார் வீதி, முழங்காவில்.
021 - 300 - 6544,
071 - 454 - 6955

புளியடிச்சந்தி,
முல்லைவீதி, விசுவமடு.
021 - 320 - 1515,
071 - 454 - 6955

# பொங்கல் சிறப்பு மலர் 2019

## சூரியனுக்கு நன்றி செலுத்தும் பொங்கல் பண்டிகை



வி.பிரணவன்
கலட்டி, யாழ்ப்பாணம்

தமிழர்களால் தை முதல் நாள் அன்று பொங்கல் பண்டிகை சிறப்பாக கொண்டாடப்படுகிறது. சூரிய பகவானுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக கொண்டாடப்படும் பண்டிகை பொங்கல் ஆகும். இதையொட்டி வீட்டில் சூரிய கோலமிட்டு மாவிலை தோரணங்கள் கட்டி வீட்டை அலங்கரிப்பார்கள்.

பொங்கலுக்கு தமிழர் திருநாள் என்பதைப் போல உழவர் திருநாள் என்ற சிறப்பு பெயரும் உண்டு. உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்பதற்கேற்ப உழவர் திருநாள் கொண்டாடப்படுகிறது. உழவர்கள் இந்த பண்டிகையை சிறப்பாக கொண்டாடுவார்கள். வருடம் முழுவதும் வயலில் வியர்வை சிந்த உழைத்த உழவர்கள் சூரிய பகவானுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக இந்த பண்டிகையை கொண்டாடு கிறார்கள்.

தை பிறந்தால் வழி பிறக்கும் இது ஆன்றோர் வாக்கு. தைத்திருநாளில் இதுவரை இருந்து வந்த துன்பங்கள் நீங்கி நல்வழி பிறக்கும் என்ற நம்பிக்கையோடு இந்த பண்டிகை சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

பொங்கல் தினத்தன்று அடுப்பில் பொங்கல் பானை வைக்கப்பட்டு அதற்கு விபூதி, சந்தனம், குங்குமம் இட்டு பானையை சுற்றி மஞ்சள் கட்டி அதில் பொங்கல் வைப் பார்கள். பொங்கல் பொங்கி வந்ததும் குடும்பத்தினர் அனைவரும் பொங்கலோ பொங்கல் என்று கூறி பொங்கலை வரவேற்பார்கள்.

பழைய காலத்தில் பொங்கல் வைக்க மண்பானை உப யோகப்படுத் தப்பட்டு வந்தது. அதன்பின் வெண் கலத்தால் செய்யப்பட்ட வெண்கலப்பானை உபயோகப்படுத்தப்பட்டது.

இப்போது கொழும்பு, வெளிநாடு போன்ற இட வசதிகள் குறைவான இடங்களில் எரிவாயு அடுப்பு (காஸ் குக்கர்) பயன்படுத்தப்படுகிறது.

தை மாதம் பிறக்கும் போது பொங்கல் பானை வைக்கப்படுவது தொன்று தொட்டு இருந்து வரும் வழக்கம் ஆகும். பொங்கலின் சிறப்பம்சம் கரும்பும் மஞ்சள் கொத்தும் ஆகும்.

பொங்கல் அன்று பால் பொங்கல், சர்க்கரை பொங்கல், வெண் பொங்கல் ஆகியவை தயாரிக்கப்பட்டு சூரியனுக்கு நிவேதனம் செய்யப்படும். கரும்பும் நிவேதன பொருளில் முக்கிய இடம் பெறும். சூரியனுக்கு நிவேதனம் என்பதால் வீட்டின் முற் றத்தில் சூரிய கோலம் இட்டு அதற்கு அருகில் நிவேதன பொருட்கள் வைத்து பூஜை செய்யப்படும்.


இதே போல இந்தியாவில் தமிழகத்தில் கணு என்ற பெயரில் பொங்கலுக்கு அடுத்த நாள் கொண்டாட்டப் படுகிறது.

இதில் முதல்நாள் செய்த பொங்கலுடன் சாதத்தில் குங்குமம் மஞ்சள் என்பன சேர்க்கப்பட்டு பல வண்ணங்களில் சாதம் செய்யப்பட்டு அவை பறவைகளுக்கு படைக்கப்படும். பெண்கள் தங்களது சகோதரர்கள் நலமுடன் இருக்க வேண்டும் என்பதற்காக இறைவனை பிரார்த்திக்கும் நாளாகவும் இது கொண்டாடப்படுகிற்து.

பொங்கலுக்கு சகோதரர்கள் தங்கள் சகோதரிகளுக்கு அரிசி, பருப்பு, பணம் ஆகியவற்றை பொங்கல் சீராக கொடுப்பது தொன்று தொட்டு நடந்து வருகிறது. அக் காலத்தில் அறுவடை முடி ந்த பின் தங்கள் சகோதரிகளுக்கு பிறந்த வீட்டு சீராக நிலத்தில் விளைந்த அரிசி, பருப்பு போன்றவற்றை கொடுத்து தங்கள் மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டார்கள். இப்போதும் சில கிராமப்பகுதிகளில் இந்தப் பழக்கம் இருந்து வருகிறது குறிப்பிடத்தக்கது.


## நலம் தரும் சித்த ஆயுர்வேத சிகிச்சை

யாழ்ப்பாண, இந்திய கேரள ஆயுர்வேத சித்த மருத்துவ முறைகளை உள்ளடக்கிய பக்கவிளைவற்ற முற்றிலும் மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட மருந்துகள் மூலம் சிகிச்சையளிக்கப்படுகிறது.



சித்த ஆயுர்வேத சத்திர சிகிச்சைகளில்

1. முள்ளந்தண்டுப் பிரச்சினை (முள்ளந்தண்டு விலத்தல், தேய்வு, வெளித்தள்ளல்)
2. முறிவு நெறிவு
3. மாறாத புண்கள் (நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட புண்கள் சிறப்புச் சிகிச்சை)
4. நாளப்புடைப்புகள் (வரிக்கோஸ்)
5. மூட்டுக்களில் ஏற்படும் தேய்வு
6. குதமார்க்கத்தில் ஏற்படும் கட்டிகள், பிஸ்ரியுலா, நாடி புண்கள் (சைனஸ்)
7. மூலநோய்கள்
8. தோல்நோய்கள் ( மருத்துவ அட்டைவிடல் சிகிச்சை)
9. ஆணிக்கூடுகள் (அக்கினி கர்ம சிகிச்சை)
10. இதய அடைப்பு (இருதய நாடிகளில் ஏற்படும் படிவுகள்)
11. குதிக்கால் வாதம், மணிக்கட்டுகளில் ஏற்படும் விறைப்பு (அக்கினி கர்ம சிகிச்சை)
12. தோள் மூட்டுவலி
13. சிறுநீரகக் கற்கள்



இவற்றுக்கு நிரந்தரத் தீர்வு

**Dr. G.Sritharan B. S.M.S. (SL) M.Phil (Jaf) PGD. in Ayurvedic surgery (Scholar) (Kelany) Reg. No. 10093**



1. பாரிசவாதம்
2. வாதரோகங்கள்
3. சர்மரோகங்கள்
4. இருமல், முட்டு .சளி, வயிற்றுப்புண், சோரியாசிஸ், மலக்கட்டு, சிறுநீரக நோய்கள்
5. மானசீகரோகம்
6. மாதர்நோய்கள்
7. மாறாத தலைவலி
8. உடல்நிறை குறைத்தல்



இவற்றுக்கு நிரந்தரத் தீர்வு

**Dr. (Mrs) S. Anpuchelvy B.S.M.S. (SL), M.D. (S) (India) Reg. No.10434**

**பொது மருத்துவ நிபுணர்**

சித்த மருத்துவ நிபுணர்களினால் பாரிசவாதம். நரம்புத் தளர்ச்சி. பேச்சுக் குறைபாடு. கண்ணில் ஏற்படும் பாதிப்பு. காது கேட்பதில் உள்ள குறைபாடு. முள்ளந்தண்டுப் பிரச்சினை, இளமையில் ஏற்படும் முதுமை போன்றவற்றுக்கு பஞ்சகர்ம சிகிச்சையும் குழந்தைகளுக்கு ஏற்படும் சளி. ஆஸ்துமா போன்றவற்றுக்கு Herbal Nebulaization & Nasal Therapy முகப்பரு. தலைமுடி உதிர்தல், வயிற்றுப்புண், நீரிழிவு, இருதயப் பாதிப்பு. வாதரோகங்களுக்கு சிறப்பான சிகிச்சையளிக்கப்படுகிறது.

குறிப்பு: பிறப்பிலே ஏற்படும் Cerebral Palsy, Autism Spectrum disordres (Global Mental Disorders), Down syndrome இவற்றிற்கு சிறப்புச் சிகிச்சை நடைபெறுகிறது.

உங்கள் குழந்தைகள் எதிர்கால ஆரோக்கியமான செல்வங்கள். குழந்தைகளுக்கு இயற்கையாகவே எதிர்ப்புச் சக்தி குறைவாகக் காணப்படுவதால் அவர்களுக்கு இருமல். சளி. காய்ச்சல். வயிற்றோட்டம், சர்மநோய்கள். கணை என்பன அடிக்கடி ஏற்படுகின்றன. அவர்களுக்கு இயற்கையாகவே எதிர்ப்புச் சக்தியைக் கூட்டுவதற்கு நம் முன்னோர்கள் பயன்படுத்திய சித்த ஆயுர்வேத மருந்துகளை ஆய்வுக்குட்படுத்தி மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டு தற்போது குழந்தைகளுக்கு பாணிவடிவில் மாற்றி சிறப்பான சிகிச்சைகளை சித்தமருத்துவ சிறப்புத் தேர்ச்சி பெற்ற நிபுணர்களினால் வழங்கப்படுகிறது. இவை நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கி நோய்களில் இருந்து பாதுகாக்கிறது.

சித்த ஆயுர்வேத. பாரம்பரிய மருத்துவ சேவையை தினமும் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 5.30 வரை பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இல. 021 222 2537, 075 041 3579, 077 820 1195. முற்பதிவு அவசியம்.

**Herbal Health Care Centre ஹேர்பல் கெல்த் கெயார் சென்ரர்**
65. கே.கே.எஸ். வீதி. கொக்குவில். (பூநாறி மரத்தடிக்கும் கொக்குவில் சந்திக்குமிடையில்)

# பொங்கல் சிறப்பு மலர் 2019


# NORTH LANKA IIT

இலங்கையின் தலைசிறந்த முதன்மை உயர்கல்வி நிறுவனம்

UGC அங்கீகாரம் பெற்று பல ஆண்டு காலம் தொடர்ந்து வெற்றிகரமாக பல உயர்கல்வி கற்கைநெறிப் பட்டதாரிகளை உருவாக்கிக்கொண்டிருக்கும் பெருமைக்குரிய கல்வி நிறுவனம்

**B.Sc in Computer Science**
Entry Qualification: O/L or A/L
Duration: 3 Years

**B.Sc in Compter Science(Top Up)**
Entry Qualification: 2 years Diploma /HND
Duration: 1 Year

**M.Sc in Computer Science**
Entry Qualification: Any Degree
Duration: 1 Year

**Bachelor of Education (B.Ed.)**
Entry Qualification: A/L
Duration: 3 Years

**Bachelor of Education (B.Ed.) (Top Up)**
Entry Qualification: 2 Years Diploma college of education teachers / Training College Teachers
Duration: 1 Year

**B.Sc. in Civil Engineering (Top Up)**
Entry Qualification: 2 Years Diploma / HND
Duration: 1 Year

**BA in English (Top Up)**
Entry Qualification: 2 Years Diploma / HND
Duration: 1 Year

**B.Sc. in Electrical and Eletronic (Top Up)**
Entry Qualification: 2 Years Diploma / HND
Duration : 1 Year

**Master of Education (M.Ed.)**
Duration: 1 Year
Entry Qualification: B.Ed. / PGD in Edu

**B.Sc in Physical Education And Sports (Top Up)**
Duration: 1 Year
Entry Qualification: 2 Year Diploma in Physical Education from any University/ Training College/ College of Education

**Master of Business Administration (MBA)**
Entry Qualification: Any Degree
Duration: 18 Months

**B.Sc in Agriculture Science**
Entry Qualification: O/L Registration fee only
Duration: 3 Years

**B.Sc in Agriculture Science (Top Up)**
Entry Qualification: 2 Years diploma / HND
Duration: 1 Year

**Doctor of Education (D.Ed) and PhD**
Entry Qualification: Any Master Degree
Duration: 3 Years


**Register Now**



தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

THE REGISTRAR,
North Lanka IIT, Top Floor, People's Bank Building, Stanley Road, Jaffna.
Tel : 0214927088 | 0214930189 | 0767504535





# SVM

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் உழவர் திருநாள் வாழ்த்துக்கள்.

**S.V. முருகேசு**
இல.154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 8899



- Album Designing
- Photo Designing
- Photo Graphy
- Banner Designing
- Video Graphy
- All Framing

**Aruloli**
Creation Studio
Kalaivaani Mill Lane, Kokuvil East, Kokuvil
Contact :- 077 468 6628 / 077 431 0960
E-mail :- aruloli2014@gmail.com







# LAKELAND INTER AMERICAN SCHOOL JAFFNA

ADMISSIONS ARE OPEN FOR MONTESSORI (AMI METHOD) ENGLISH MEDIUM

**HURRY TO REGISTER AGE GROUPS 2 1/2 YEARS TO 5 1/2 YEARS**

எமது கற்பித்தல் முறைமையானது (AMI METHOD) இல் ஆங்கில மொழி மூலம் (ENGLISH MEDIUM), கருவிகள், உபகரணங்கள் கொண்டு காட்சிப்படுத்தி (APPARATUS) பிள்ளைகளின் திறமைகளை வெளிக்கொணர்வதன் மூலம் சிறார்களின் ஆரோக்கியமான எதிர்காலத்திற்கு ஏற்ற சூழலை உரு வாக்குதல் ஆகும்.

2 1/2 வயது தொடக்கம் 5 1/2 வயது வரையுள்ள குழந்தைகள் எமது பாட சாலைக்கு உள்வாங்கப் படுவார்கள். ஆர்வமுள்ள பெற்றோர்களிடமிருந்து விண் ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

## OUR VISION

To become a model school which transforms personalities into academically sound, physically healthy, Multi skilled individuals with good human values to be responsible future leaders of the global community.

## OBJECTIVES

To create an opportunity- filled environment conducive to the child to explore the environment at his/ her own capacity and carve his/ her niche in today's world.

To provide enriching strategies that would encourage students to be goal-oriented and to be self- managers.

To empower the student to succeed in today's dynamic world by integrating general education and other practical skills, thereby providing a TOTAL educaion, satiating the need of the intellect, the body and the soul.

CONTACT OUR OFFICE FOR APPLICATION FORM AND FURTHER DETAILS

**154 , BROWN ROAD, JAFFNA.**
**TEL: 021 222 6242, HOT LINE: 077 244 4172**

# பொங்கல் சிறப்பு மலர் 2019


யாழ்.மாவட்ட மக்களின் மனங்களில் முதற்தர
சுத்தமான குடிதண்ணீர் என்ற தனி நாமத்தைப் பெற்ற...

American Water

American Just drink it!

யாழ். மாவட்ட ஏக விநியோகஸ்தர்கள்



P.N.K. Group



உழவர் திருநாள் வாழ்த்துக்கள்

589, K.K.S.Road, Jaffna.

T.P :- 021 221 7277, 021 222 3096




S.Sugumaran
Proprietor
Nivessmns@gmail.com

மிலேனியம்

உல்லாசப் பயணிகள் விடுதி மற்றும் உணவகம்


Millennium

Guest House & Restaurants



Bedroom - 4500 /= AC / 4000/= Non A/C
4 Bed - 4000 /= AC / 3500/= Non A/C
3 Bed - 3500 /= AC / 3000/= Non A/C
2 Bed - 2500 /= AC / 2000/= Non A/C

24 Rooms உம் ஒன்றாக எடுத்தால்
3000/= படி 24 Rooms உம்





22 AC Rooms & Hall

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், அனைவருக்கும் எமது
உள்ளம் கனிந்த தைத்திருநாள் வாழ்த்துக்கள்.

No. 76/60, Ramanathan Road,
(Campus Road) Kaladdy, Jaffna.
Tel :- 021 222 5876, 077 601 6310,
021 221 5195, 021 221 5196

# பொங்கல் சிறப்பு மலர் 2019


அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை

## சசிகா லேணர்ஸ்

DS No - 882

முறைமையான சாரத்தியத்தைக் கற்றுக்கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்

தலைமை காரியாலயம்
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். Hotline - 077 722 6247
021 221 7678, 077 614 0361

THE SASIKA LEARNERS

வாகன விபத்தைத் தவிர்ப்போம்
உயிர்களைக் காப்போம்.

புதிய கிளை :
கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு.
தொ.பே. : 021 225 2333 / 071 255 4135

கிளை நிறுவனங்கள் :
மல்லாகம் : K.K.S வீதி , மல்லாகம்.
021 224 3393 / 070 301 3014
வேலணை : வங்களாவடிச் சந்தி, வேலணை.
021 221 5472 / 070 301 3012
சங்கானை : ஓடக்கரை வீதி, சங்கானை.
021 225 1664 / 070 301 3016

SasikaLearners
sasikadrivingschool@gmail.com

821 C, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 222 8004



## துர்க்கா பொத்தகச் சோலை

பாடசாலை உபகரணங்கள்
அப்பியாசக்கொப்பிகள் என்ப
வற்றை குறைந்த விலையில்
பெற்றுக் கொள்ளலாம்.



துர்க்கா பொத்தகச் சோலை
பஸ்நிலையம் முன்பாக சுன்னாகம்,
T.P :- 021 224 0009





ஒன்பதாயிரம்
கடந்த பதிவுகள்

பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை
உங்கள் பொருத்திய சாதனை

## கல்யாண மாலை

உலகின் எப்பாகத்திலிருந்தும்
தொடர்புகொள்ள
www.kalyanamalai.lk
இணையத்தளத்தைப் பாருங்கள்

நிலைய நிர்வாக செலவிற்காக
பதிவுக்கட்டணம் ரூபாய் 1000/-
சேவைக் கட்டணம் ரூபாய் 300 /-

தொடர்பு –
கல்யாணமாலை இல. 144,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்



T.P : 021 720 1005, 021 221 5434 Email : Kalyanamalai.jaffna@gmail.com






## சித்தா

றெஜிபோம் டிசைனிங்
அன்ட் ஸ்கிறீன் பிறிண்டிங்

மங்களகரமான வைபவங்களுக்குரிய றெஜிபோம் டிசைன்ஸ் **3 D** டிசைன்களாகவும் **2 D** டிசைன்களாகவும் - ஐசிங் கட்டிங் மற்றும் வாடிக்கையாளர்கள் விரும்பிய டிசைன்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.









**HD, Quality** யான றெஜிபோம்கள்,
**Quality** யான
**Colouring Dust**
தரமாகவும் மலிவாகவும்
குறித்த நேரத்தில்
பெற்றுக்கொள்ளலாம்.



இல.49A, அச்சுக்கூட லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
தொடர்புகளுக்கு : 075 039 4357,
075 544 5901

# நெற் செய்கை இழப்பீடுகளை ஆராய்வதற்கு தேசிய விவசாயக் காப்புறுதிக்குழுக்கள் தரவு சேகரிக்கும் பணியில் களமிறக்கம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அழிவடைந்த நெற்செய்கை தொடர்பாக ஆராய்ந்து இழப்பீடுகள் வழங்குவதற்காக ஆறுக்கு மேற்பட்ட தேசிய விவசாயக் காப்புறுதிக் குழுக்கள் தரவு சேகரிக்கும் பணிகளில் ஈடுபட்டு வருவதாக புளியம்பொக்கணைக் கமநல சேவை நிலையத்தின் விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆ.பிரியந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிபகையில், கடந்த மாதம் பெய்த கன மழையையடுத்து இரணைமடுக்குளம் பெருக்கெடுத்ததில் கண்டாவளைப் பகுதியே அதிகம் பாதிக்கப்பட்டது.

தமது பிரதேசத்தில் 10 ஆயிரத்து 488.25 ஏக்கர் நெற் செய்கைக்காக பசளை உரங்களை வழங்கியதாகவும் தெரிவித்தார்.

நெற்செய்கையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இதுவரை தாம் எந்தவொரு இழப்பீடுகளையும் வழங்கவில்லையெனவும் தரவுகளைத் திரட்டும் விசேட குழுக்கள் ஒவ்வொரு விவசாயிகளையும் தனித்தனியாகச் சந்தித்து இழப்பீடுகள் தொடர்பாக ஆராய்ந்து வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும் விவசாயிகளுக்கான இழப்பீடுகள் காப்புறுதிக் குழுக்களின் தரவுகளுக்கமைவாக மேலதிக நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (2-10)




# அறுவடை செய்கின்ற நெல்லுக்கு உரிய விலை நிர்ணயிக்கப்படவில்லை

## கிளிநொச்சி விவசாயிகள் கவலை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது அறுவடை செய்கின்ற நெல்லை உரிய விலைகளில் சந்தைப்படுத்த முடியாத நிலை காணப்படுவதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்

தற்போது காலபோக அறுவடை ஆரம்பித்துள்ள நிலையில் எற்கனவே வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் அறுவடை செய்கின்ற நெல்லை சந்தைப்படுத்துவதிலும் அதற்கான நிர்ணய விலையின்றியும் பெரும் நட்டத்தை எதிர்கொள்கின்றனர்.

அறுவடைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்வதற்கான எந்த நடவடிக்கைகளும் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை. இதனால் சிவப்பு நெல் ஒரு மூடை மூவாயிரம் ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்பட்ட நிலையில் 75 கிலோ கொண்ட சிவப்பு நெல் ஆயிரத்து 750 ரூபா விற்கும் 4 ஆயிரம் ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்ட சம்பா மற்றும் வெள்ளை நெல் ஒரு மூடை 3 ஆயிரம் ரூபா வரையிலும் தனியார் வர்த்தகர்களால் கொள்வனவு செய்யப்படுகின்றது.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக பெருமளவான அழிவுகளை எதிர்கொண்ட விவசாயிகள் தற்போது அறுவடை செய்கின்ற நெல்லுக்கு உரிய விலையின்றி மேலும் நட்டத்தை எதிர்நோக்குவதாக கவலை தெரிவித்துள்ளனர்.

அறுவடை செய்யும் நெல்லை இதுவரை நெல் சந்தைப்படுத்தும் சபையினூடாகவோ அல்லது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினூடாகவோ நிர்ணய விலையில் நெல்லைக்கொள்வனவு செய்வதற்கு எந்த நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை என்றும் விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். (2-315)



கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிளி/பன்னங்கண்டி இ.த.க. பாடசாலை மாணவர்களுக்கும் கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலய மாணவர்களுக்கும் அண்மையில் சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும் அங்கத்தவர்களும் இணைந்து ஒரு இலசத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்களை அன்பளிப்பாக சங்கத்தலைவர், பொது முகாமையாளர், இயக்குநர் சபை உறுப்பினர்கள் ஆகியோர் வழங்கி வைப்பதைப் படத்தில் காணலாம்.

# உலருணவு பொருட்கள் அடங்கிய பொதிகள் கிளிநொச்சியில் வழங்கல்





(மன்னார்)

மன்னார் சமூக பொருளாதார நிறுவனத்தினால் சுமார் 25 இலட்சம் ரூபா பெறுமதியான வெள்ள நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அநேகமான மக்களுக்கு அரசாங்கம்மற்றும்தொண்டு நிறுவனங்கள், பொது அமைப்புக்கள் என பலரும் வெள்ள நிவாரண உதவிகளை வழங்கி வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் பெரிதும் வெள்ள நிவாரணப் பொருட்கள் கிடைக்கபெறாத கிராமங்களான உழவனூர், நாதன் குடியிருப்பு,இராமநாதபுரம்,புளுதியாறு ஆகிய கிராமங்களில் உள்ள சுமார் 700 குடும்பங்களுக்கு தேவையான உலருணவு பொருட்கள், அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய பொதிகள் மன்னார் சமூகப் பொருளாதார மோம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஊடாக வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் ஒத்துழைப்பின் பேரில் தெரிவு செய்யப்பட்ட குறித்த கிராமங்களுக்கான பொருட்கள் மன்னார் சமூக மேம்பாட்டு நிறுவனத்தின் தலைமை அதிகாரி ஜாட்சன் தலைமையில் மக்களிடம் கையளிக்கப்பட்டன.

குறித்த நிவாரணங்களை வழங்கும் நிகழ்வில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு அதிகாரிகள், கிராம சேவகர் மற்றும் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சுமார் 25 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களைப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கி வைத்தனர். (2-285)

# வவுனியாவில் மார்கழி இசை விழா






(பனிக்கன்குளம்)

வவுனியா பிரதேச கலாசார பேரவையும், வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டமும் இணைந்து நடத்திய மார்கழி இசை விழா அண்மையில் வவுனியா பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

கலாபூஷணம் திருமதி. தேவிமனோகரி நாகேஸ்வரனின் நினைவாக இடம் பெற்ற இந்நிகழ்வில் கலைஞர்களினால் கர்நாடக சங்கீத இசை நிகழ்வுகளும், நினைவுரைகளும் இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

உதவி பிரதேச செயலாளர் திருமதி.பிரியதர்சினி சஜீவன் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில்வவுனியா தெற்கு வலயக் கல்விப்பணிப்பாளர் மு.இராதாகிருஸ்ணன், நகரசபை உறுப்பினர் சேனாதிராசா, வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்ட தலைவர் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-281)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு சப்ரகமுவ மாகாண மாணவர்கள் உதவி

(முல்லைத்தீவு)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவும் செயற்றிட்டத்தின் கீழ் சப்ரகமுவ மாகாண பாடசாலை மாணவர்களின் ஒத்துழைப்பில் முல்லைத்தீவு கல்வி வலயத்துக்குட்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

சப்ரகமுவ மாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்த செயற்றிட்டத்தில் அங்குள்ள பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் அனைவரும் தம்மாலான உதவிகளை வழங்கியுள்ளனர்.

அவர்களிடம் இருந்து பெற்றுக்கொண்ட உதவிப் பொருட்கள் குறித்த நிகழ்வில் பாடசாலை அதிபர்களிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சப்ரகமுவ மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மகிந்த விஜய சூரிய, வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், வலயக்கல்விப்பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச் செயற்பாடு மாணவர்கள் மத்தியில் நல்லிணக்கத்தை உருவாக்கும் செயற்பாடாக அமைந்துள்ளது என வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (2-9-10)



உழவர் திருநாளான தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலுள்ள சந்தைகளில் பொங்கல் வியாபாரம் நேற்றைய தினம் கள்ளைகட்டி இருந்தது. இதன்போது பொங்கலுக்குத் தேவையான பொருட்களைப் பொதுமக்கள் கொள்வனவு செய்வதைப் படங்களில் காணலாம்.

(படங்கள்:-குமார், கண்டாவளை செய்தியாளர்)

# வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் நடைபாதை வியாபாரம் செய்யத்தடை



(பனிக்கன்குளம்)

வவுனியா பழைய பேருந்து நிலையப்பகுதியில் நடைபாதை மற்றும் பயணிகளுக்கு இடையூறு ஏற்படும் விதத்தில் வியாபாரம் மேற்கொள்வதற்கு நேற்று முதல் நகரசபை உப தவிசாளரினால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் நடைபாதையிலும் பயணிகள் போக்குவரத்து மேற்கொள்வதற்கும் அப்பகுதியிலிருந்து வியாபாரம் மேற்கொள்பவர்களினால் இடையூறுகள் ஏற்படுத்தப்படுவதாக கிடைத்த முறைப்பாட்டினையடுத்து நேற்றுக் காலை அப்பகுதிக்குச் சென்ற நகரசபை உப நகர பிதா சு.குமாரசாமி மற்றும் நகரசபை மேற்பார்வை பொது சுகாதாரப்பரிசோதகரினால் அப்பகுதியில் நடைபாதை மற்றும் பயணிகளுக்கு இடையூறுகள் ஏற்படும் விதத்தில் வியாபாரம் மேற்கொண்டவர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பயணிகளுக்கு இடையூறுகள் ஏற்படுத்தாமலும் பேருந்து நிலையம் தரித்து நிற்கும் பகுதியிலுள்ள நடை பாதையிலிருந்து வியாபாரம் மேற்கொள்வதற்கும் இன்று முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதன்போது பயணிகளுக்கு விற்பனைப் பொருட்களைப் பொதி செய்து வியாபார நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவற்றை மீறி அப்பகுதியில் தொடர்ந்து இவ்வாறு வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-281)

## வைத்தியசாலை வருடாந்த விழா

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலை வருடாந்த விழாவானது கடந்த 12 ஆம் திகதி பணிப்பாளர் தலைமையில் கொண்டாடப்பட்டது.

இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக சிரேஷ்ட என்பு முறிவு வைத்தியநிபுணர் வைத்திய கலாநிதி கோபிசங்கர் கலந்து சிறப்பித்தார்.

சிறப்பு விருந்தினர்களாக வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள்,முன்னாள் பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

மேலும் இவ்விழாவில், பல வருடங்கள் அங்கு சேவைசெய்து ஓய்வு பெற்றவர்களும் மாற்றலாகிச் சென்றவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

வைத்திய கலாநிதி கோபிசங்கர் யாழ்.போதனா வைத்தியசாலையில் பணியாற்றுபவராக இருந்தும் கடந்த ஆறு வருடங்களுக்கு மேலாக மாதந்தோறும் முல்லைத்தீவு வைத்தியசாலையில் முறிவு சிகிச்சையை மேற்கொண்டு வருகிறார்.

அவரது அளப்பரிய சேவையை பாராட்டி கௌரவித்து நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது. நிகழ்வின் இறுதியில் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. (2-281)



## மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்



(கிளிநொச்சி)

கடந்த கால யுத்த நிலைமைகளினால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் கிளிநொச்சி மாவட்ட சங்கத்தினால் வட்டு இந்து வாலிபர் சங்கத்திடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக அண்மையில் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான புத்தகப் பைகளுடன் இணைந்த கற்றல் உபகரணங்கள் 110 பாடசாலை மாணவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

நிகழ்வில் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வட்டு இந்து வாலிபர் சங்கத்தின் சமூக கல்வி மேம்பாட்டுத் துறை பொறுப்பாளர் தவராசா நவீந்திரன் கலந்து கொண்டு வழங்கினார். (2)

## காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களுக்கு உதவி

(வவுனியா)

வவுனியாவில் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களுக்கு தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு 50 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த 691 நாட்களாக வவுனியாவில் தொடர்ந்து சுழற்சி முறையில் உணவுத் தவிர்ப்புப் போராட்டம் மேற்கொண்டு வரும் தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட சங்கத்தின் உறவுகள் 50 குடும்பங்களுக்கு அண்மையில் அறம் செய் அறக்கட்டளை அமைப்பின் தலைவர் ஆர்.ஞானசேகரம், பொருளாளர் செல்வித.கலைமதி ஆகியோர் கலந்து கொண்டு போராட்ட களத்தில் தொடர்ந்து போராட்டம் மேற்கொண்டு வரும் 50 காணாமல் போன குடும்பங்களின் உறவினர்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கிவைத்துள்ளனர். (2)



வவுனியா நகரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ கந்தசாமி கோவிலின் வருடாந்த மஹோற்சவம் கடந்த 12 ஆம் திகதி முற்பகல் 11.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானதைப் படங்களில் காணலாம்.

### இராணுவக்கட்டுப்பாட்டில் விளையாட்டு மைதானம்

# மாணவர்கள் பிறிதொரு மைதானத்தில் பயிற்சி

(கண்டாவளை)

கிளிநொச்சி மகாவித்தியாலய விளையாட்டு மைதானம் விடுவிக்கப்படாத நிலையில் மாணவர்கள் ஒரு கிலோமீற்றர் தூரத்திலுள்ள உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் இல்ல விளையாட்டுப் போட்டிக் கான பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கிளிநொச்சி நகரின் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாகக் காணப்படும் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் தற்போது தரம் 6 தொடக்கம் உயர்தரம் வரை சுமார் இரண்டாயிரத்து 680 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இதனைவிட கிளிநொச்சி ஆரம்பவித்தியாலயத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இந்நிலையில் இப்பாடசாலைக்குச் சொந்தமான விளையாட்டு மைதானக் காணியாக காணப்படும் மகா வித்தியாலயத்திற்கு முன்பாகவுள்ள காணி கடந்த 2009 ஆம் ஆண்டுக்குப்பின்னர் இராணுவத்தினரின் பயன்பாட்டில் இருந்து வருகின்றது.

இந்நிலையில் குறித்த காணியை விடுவித்து தருமாறு கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் முன்னைய அரசாங்கத்திடமும் அதனுடன் சேர்ந்து செயற்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் ஆகியோரிடம் பாடசாலை நிர்வாகம், மாவட்ட சிவில் அமைப்புக்கள், கல்வியியலாளர்கள் எனப்பலரும் கோரிக்கைவிடுத்து மகஜர்களையும் கையளித்த போதும் எந்தவித விமோசனமும் கிடைக்காத நிலையில் காணப்பட்டது.

கடந்தாண்டு குறித்த காணி விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட போதும் மீண்டும் மைதானக் காணி படையினரின் பயன்பாட்டிலிருந்து வருகின்றது.

இதனால் இல்ல விளையாட்டுப் போட்டிகள் மற்றும் ஏனைய போட்டிகளுக்கான பயிற்சிகளை பெற்றுக் கொள்வதற்கு ஒருகிலோமீற்றர் தொலைவிலுள்ள உதயதாரகை விளையாட்டு மைதானத்திற்குச் சென்று மாணவர்கள் தமது பயிற்சிகளைப் பெற்றுக் கொள்கின்றனர். இது தொடர்பில் கவனமெடுத்து படையினர் மேற்படி பாடசாலைக்கு முன்பாகவுள்ள படையினர் வசமுள்ள காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். எனப் பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

# கத்தோலிக்க தேவாலயங்களில் இன்று பொங்கல் நிகழ்வுகள்

(மன்னார்)

மன்னார் மறைமாவட்டத்திலுள்ள அனைத்து கத்தோலிக்கத் தேவாலயங்களிலும் இன்றைய தினம் பொங்கல் நிகழ்வுகள் மேற்கொள்ள ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார் தெரிவித்துள்ளார்.

தைப்பொங்கல்தினமான இன்று செவ்வாய்க்கிழமை காலை 6 மணியளவில் மன்னார் மறைமாவட்டத்திலுள்ள அனைத்து கத்தோலிக்க தேவாலயங்களிலும் பொங்கல் நிகழ்வுகள் இடம்பெறும்.

குறிப்பாக இறைவன் கொடுத்துள்ள கொடைகளுக்கு நன்றி தெரிவித்துப் பொங்கல் நிகழ்வு இடம் பெறவுள்ளதோடு, விசேட திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும் என மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் தெரிவித்துள்ளார். (2-285)

## பேருவளை சீனன்கோட்டை முஸ்லிம்களால் உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட கண்டாவளை கல்லாறு மக்களுக்கு தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு பேருவளை சீனன் கோட்டை பள்ளிச் சங்கத்தின் அனுசரணையுடன் பேருவளை சீனன் கோட்டை முஸ்லிம்களால் உலருணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

பேருவளை சீனன் கோட்டை பள்ளிச் சங்கத்தினால் சீனன் கோட்டை மக்களிமிருந்து சேகரிக்கப்பட்ட பெறுமதியான உலருணவுப் பொருட்கள் நேற்று முற்பகல் 10 மணியளவில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கண்டாவளை கல்லாறு கிராம மக்களுக்கு வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் சீனன் கோட்டை பள்ளிச் சங்கத்தின் இணைச் செயலாளர் எம்.எம். சிஹாப் ஹாஜி யார், உறுப்பினர் ஏ.இஸட். எம்.ஸவா ஹிர் தலைமையிலான குழுவினர் வழங்கி வைத்தனர்.

இதில் கண்டாவளை உதவிப் பிரதேச செயலர், கிராம அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (2-315)

ஏர் நடக்கும் எனில் இயலிசை நாடகம் நடக்கும்
பார் நடக்கும் பசி நடக்கமாட்டாதே.

~ கம்பர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சூரியக் கடவுள் விரும்பிக் கேட்கும் தைப்பொங்கல் பொங்கட்டும்!

இன்று தைப்பொங்கல். தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது நம் நம்பிக்கை.

மண்ணில் நல்லவண்ணம் வாழ்வதற்கு உழவுத் தொழில் செம்மையாக நடந்தாக வேண்டும்.

வேளாண் முயற்சியே மனிதர்களுக்கும் இதர ஜீவராசிகளுக்கும் உணவைத் தருவதாகும். இவ்வாறு விவசாய விளைச்சலை மானிடம் பெற்றுக் கொள்வதற்கு சூரியக் கடவுளே மூல காரணனாக இருக்கிறார்.

தவிர, ஆதிகால மனித வாழ்வு என்பது இயற்கையை வழிபடுகின்ற பண்பாட்டைக் கொண்டிருந்தது.

அதில் தமிழினம் சூரியக் கடவுளரைக் கண்கண்ட தெய்வமாகப் போற்றி வழிபட்டுள்ளமையை தொல்லியல் சான்றுகள் உறுதி செய்துள்ளன.

அந்த வகையில் தமது உணவுக்கு உறுதுணையாக இருந்த சூரியக் கடவுளுக்கு நன்றி கூறுவதாக தைப்பொங்கல் திருநாள் அமைந்துள்ளது.

நன்றி மறப்பது நன்றன்று என அறம் உரைத்த நம் தமிழ்க்குலம் நன்றி செலுத்துவதைத் தான் வாழ்வின் முதற்கடமையாகக் கருதிக் கொண்டது.

இதனடிப்படையில் சூரிய பகவானுக்கு பொங்கிப் படைத்து தன் நன்றியைச் செலுத்துகின்ற தமிழ்ப் பண்பாடு தமிழர் திருநாளாகப் போற்றப்படுகிறது.

தைமாதத்தின் முதல் நாள் சூரியப் பொங்கலோடு தமிழர்களின் புதுவாழ்வு தொடங்கும்.

வருடம்முழுவதும்உழைத்துபாடுபட்டுவிளைச்சலைத் தேடிய தமிழ்ச் சமூகம் தைத்திங்களின் முதல்நாளை தங்கள் வாழ்வின் புத்தூக்க நாளாகத் நிர்ணயித்துக் கொண்டது.

களனியில் விளைந்த நெல் அரிசியையும் வீட்டுத் தோட்டத்தில் விளைந்த முக்கனிகள் மற்றும் கரும்பு, இளநீர், பசும்பால், தேன், நெய் என்பன கொண்டு பொங்கல் செய்து சூரியக் கடவுளுக்குப் படைத்து மகிழ்வதும் மற்றவர்களுக்குக் கொடுத்து உண்பதுமான மானிடத்தின் உன்னத மகிமை தைப்பொங்கலினூடு ஆரம்பமாகும்.

எனினும் இன்றைய தமிழர்களின் தைப்பொங்கல் திருநாள் சந்தையில் வாங்கிய பொருட்களோடு பொங்கல் நடந்தாகிறது.

என்ன செய்வது அரச பணி, தனியார் தொழில், பாடசாலைக் கல்விக்கு மேலாக ஓய்வின்றி நடக்கின்ற தனியார் கல்விக் கலாசாரம் என்ற இயந்திர வாழ்வுக்குள் சிக்குண்ட நம் தமிழினத்தால் எதுவும் செய்ய முடியவில்லை.

வீட்டுத் தோட்டத்து வாழையும் முற்றத்து மாமரமும் வீட்டுக்கொரு பசு வளர்க்கும் நடைமுறையும் காற்றோடுபோன செய்தியாயிற்று.

கிணற்றடியில் குலைபோட்டு நின்ற செவ்விளநீர் தறியட்டு பல வருடமாயிற்று. கூடவே குளியல் நீரை உறிஞ்சிச் சாறாகத் தருகின்ற கரும்பை சந்தையிலன்றி வேறு எங்குதான் காணமுடியும்.

ஆம், தைப்பொங்கல் மட்டும் ஏதோ சம்பிரதாயத்துடன் நடக்கிறது. ஆனால் உண்மையான தைப்பொங்கலின் தத்துவம் மட்டும் இல்லாமல் போய்விட்டது.

இந்தக் குறை நீங்கி, வருகின்ற தைப்பொங்கல் வீட்டுத் தோட்டத்தில் விளைந்த கனிகளோடும் நாம் வளர்த்த பசு தந்த பாலோடும் பொங்கட்டும்.

அதுவே சூரியக் கடவுள் நம்மிடம் விரும்பிக் கேட்கும் தைப்பொங்கலாகும்.

## நாவற்குழி பகுதியில் போதைவஸ்துடன் நால்வர் கைது

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி நாவற்குழி பகுதியில் வைத்து போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட நான்கு சந்தேக நபர்களை சாவகச்சேரி பொலிஸார் நேற்று இரவு 11.00 மணிக்கு கைது செய்துள்ளனர்.

நாவற்குழி பகுதியில் வைத்து தினமும் போதைப் பொருள் வியாபாரம் இடம் பெறுவதாக அப்பகுதி மக்கள் மாவட்ட குற்றப்புலனாய்வு பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் ஜே.ஜெயறோசனுக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இத்தகவலையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட குற்றப்புலனாய்வு பொறுப்பதிகாரி. போதைப்பொருள் வியாபாரம் நடைபெறுகின்ற இடத்தினை அடையாளம் கண்டுள்ளார்.

பொலிஸாரைக் கண்டதும் போதைப்பொருள் வியாபாரிகள் தப்பிச்செல்ல முற்பட்டுள்ளனர். எனினும் பொலிஸார் நான்கு சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர். இதன்போது கைது செய்யப்பட்டவர்களின் உடைமையில் இருந்து ஒரு தொகுதி குடு ரக போதைப் பொருளும் எழுபதாயிரம் ரூபாய் பணத்தினையும் மீட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் மூன்று பேர் யாழ்ப்பாணத்தினையும் ஒருவர் கிளிநொச்சியையும் சேர்ந்தவர்கள் என சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர்கள் நால்வரும் நேற்றைய தினம் சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர். (ம-30.89)

### மன்னார் கடற்கரைப் பகுதியில்

## 302 கிலோ கடல் அட்டை கடற்படையினரால் மீட்பு

(மன்னார்)

சட்டவிரோதமாக பிடிக்கப்பட்ட ஒரு தொகை கடல் அட்டைகள் இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப் பட்டுள்ளன.

வட - மத்திய கடற்படை கட்டளை தலைமையகத்தின் கடற்படையினரால் நேற்று திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கைகளின் போது மன்னார் கடற்கரை பிரதேசத்தில் இவ்வாறு சட்டவிரோதமாக பிடிக்கப்பட்ட கடல் அட்டைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சுமார் 302 கிலோ கிராம கடல் அட்டைகள் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளன.

இவை மீட்கப்பட்ட குறித்த இடத்திலிருந்து சட்டவிரோத கடற்றொழில் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த கடல் அட்டைகள் மீன்பிடி இயந்திரத்தினுள் 12 பைகளில் பொதியிடப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும் மீட்கப்பட்டுள்ள கடல் அட்டைகள் மற்றும் இயநதிரங்கள் என்பன மேலதிக பரிசோதனைகளுக்காக யாழ் சுங்க திணைக்களத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ம-285)

## வவு.மடுக்குளம் பகுதியில் வெடிபொருட்கள் மீட்பு

(குருமன்காடு)

வவுனியா மடுக்குளம் பகுதியில் உள்ள தோட்ட காணியிலிருந்து வெடி பொருட்களை பூவரசங்குளம் பொலிஸார் நேற்றைய தினம் மீட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக மேலும தெரியவருவதாவது,

கடந்த ஒரு வாரத்திற்கு முன்பாக வவுனியா மடுக்குளம் பகுதியில் உள்ள தனியார் காணியை அதன் உரிமையாளர் உழவு இயந்திரம் மூலம் பண்படுத்தியுள்ளார். பண்படுத்தப்பட்ட குறித்த காணியில் சிறுவன் ஒருவன் விளையாட சென்ற நிலையில் உரப்பை ஒன்றில் சுற்றிவைக்கப்பட்ட நிலையில சந்தேகத்திற்கிடமான பொருட்கள் இருப்பதை அவதானித்து தனது தந்தைக்கு தெரியப்படுத்தியுள்ளான்.

பின்னர் குறித்த விடயம் பூவரசங்குளம் பொலிஸாருக்கு தெரியபடுத்தப்பட்ட பின சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் குறித்த உரப்பையினை சோதனை செய்து பார்த்தபோது மூன்று கைக்குண்டுகள் மற்றும் ரி56 ரக துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் ரவைகள், கோல்சர் என்பவற்றை மீட்டுள்ளனர்.

இதேவேளை, மண்ணில் புதையுண்டு கிடப்பதால் மேலும் வெடிபொருட்கள் அதனுள் இருக்கலாம் என்று தெரிவித்த பொலிஸார் சம்பவம் தொடர்பாக விசேட அதிரடிபடையினருக்கும் தகவல் தெரிவித்துள்ளனர். நீதிமன்றின் அனுமதியுடன் குறித்த பகுதியை ஆழமாக்கி சோதனை மேற்கொள்ளவுள்ளதாக பொலிஸார் மேலும தெரிவித்தனர். (ம-250. 281)

## பட்டப்போட்டித் திருவிழா

தைப்பொங்கலை முன்னிட்டு பட்டப்போட்டித் திருவிழா இன்று பிற்பகல் 2 மணியளவில் விக்னேஸ்வரா சனசமூக நிலைய அனுசரணை யுடன் வல்வெட்டித்துறை உதயசூரியன் உல்லாசக் கடற்கரையில் இடம்பெறும். (இ-10-19)

## கலைவிழாவும் பட்டிமன்றமும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சங்கிலியன் மன்றம் நடத்தும் கலைவிழா தைப்பொங்கல் தினமான இன்று 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 7 மணியளவில் சங்கிலியன் மன்றத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் யாழ். பட்டிமன்றக் குழுவினர் வழங்கும் சிறப்புப் பட்டிமன்றம் பண்டிதர் பொன்.சுகந்தன் தலைமையில் நடைபெறும். (இ-5)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட் டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை மணிவரை யாழ்.பிரதேசத்தில் கல்லாரை பிரதேசத்திலும் மன்னார் பிரதேசத்தில் நானாட்டான் பிரதேசம், செம்மண்தீவு, செம்மண்தீவு **Ware House,** அச்சங்கு ளம், எருவிட்டான், அறுகு குன்று, அளவக்கை, மாவிலங் கேணி, வாழ்க்கை பட்டான்கண்டல், பல்லங்கோட்டை, பண்டாரி குளம்,உமணகிரி, நறுவிலிக்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப்படும் (9)

## சிறப்புமிகு எண்ணங்கள்...

- எல்லாவற்றிற்கும் அடிப்படை எண்ணங்கள் தான்.எண்ணங்கள் தூய்மையாக இருந்தால் அதன் செயல்களும் பலன்களும் வெற்றியாகும். எதிர் மறையான எண்ணங்களே வெற்றிக்குத் தடையாக அமைகின்றது.
- ஆக்கபூர்வமான சிந்தனைகளை நடைமுறைப படுத்தும்போது தான் சிறந்த எண்ணங்களுக்கு வித்தாக அமைகின்றது.
- எதைச் செய்யலாம்? எதைச் செய்யக் கூடாது? போன்றவைகளை சிந்துத்து செயற்படுவதன் மூலம் தான் தனித்தன்மை தோன்றுகிறது.
- தனித்தன்மை மூலம் தான் எண்ணங்கள் சிறந்ததாக விளங்குகிறது.
- சாதிக்கவேண்டும் என்கிற எண்ணம் தோன்றி விட்டால் அதையே கருவாக கொண்டு முயற்சியிலும் உழைப்பிலும் அக்கறையோடு செயற்பட வேண்டும். அப்படி செயற்பட்டால் தான் வெற்றிக்கு சிறப்புமிகு எண்ணங்களே "தூண்களாய்" அமைகின்றன.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- ❖ நம்மிடத்தில் நம்பிக்கை, கடவுளிடத்தில் நம்பிக்கை இதுவே வெற்றி பெறுவதற்கான பரம ரகசியம்.
- ❖ தன்னம்பிக்கை கொண்ட ஒருசிலரின் வாழ்க்கை வரலாறே உலக சரித்திரமாக விளங்குகிறது.
- ❖ பாவம் என்ற ஒன்று உலகில் இருக்குமானால் அது, "நான் பலவீனமானவன் மற்றவர்கள் பலவீனமானவர்கள்" என்று சொல்வது ஒன்று தான்.
- ❖ சுதந்திரமானவர்களாக வாழுங்கள். எவரிடமிருந்தும் எதையும் எதிர்பார்த்துக் காத்திருக்காதீர்கள்.
- ❖ "இல்லை" என்றோ, "என்னால் இயலாது" என்றோ ஒருபோதும் சொல்லாதீர்கள். உங்களால் எதையும் சாதிக்க முடியும்.
- ❖ தோல்வியைப் பொருட்படுத்தாதீர்கள். ஆயிரம் முறை தோற்றாலும் மீண்டும் ஒருமுறை முயற்சியில் இறங்குங்கள்.
- ❖ சிங்கத்தின் இதயம் படைத்த ஆண்மகனையே திருமகள் விரும்பி சேர்கிறாள். கடந்து வந்த பாதையைப பின்னால் திரும்பிப் பார்க்கத் தேவையில்லை. ஊக்கத்துடன் முன்னோக்கிச் செல்லுங்கள்.

# திருகோணமலை மாணவர்கள் படுகொலை விசாரணைகள் தொடர்கின்றன-அரசாங்கம்



(கொழும்பு)

2006 ஆம் ஆண்டு திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பிலான விசாரணைகள் இன்னமும் தொடர்கின்றன என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.


திருகோணமலை மாணவர்கள் படுகொலை தொடர்பிலான விசாரணைகளையோ அல்லது ஏனைய முக்கிய சம்பவம் தொடர்பிலான விசாரணைகளையோ அரசாங்கம் அலட்சியம் செய்யவோ கைவிடவோயில்லை என அவர் தெரிவித்தார்.

சில விசாரணைகள் பல காலம் நீடிக்கக்கூடியவை எனத் தெரிவித்துள்ள இராஜாங்க அமைச்சர் குறிப்பாக படையினர் தொடர்பான விசாரணைகள் நீண்ட காலம் நீடிக்கலாம் எனத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான விடயங்கள் காரணமாக குழப்பங்கள் ஏற்படுகின்றன, நாங்கள் அவற்றின் ஊடாக விசாரணைகளை முடிவிற்குக் கொண்டு வரவேண்டியுள்ளது, அதேவேளை நாங்கள் இந்த விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றோம் என்பதை நிச்சயமாகத் தெரிவிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

திருகோணமலை மாணவர்கள் படுகொலை குறித்த விசாரணைகளுக்கு அரசாங்கம் முன்னுரிமை அளிக்கின்றது எனவும் குறிப்பிட்டுள்ள அவர் கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தவர்களுக்கு விரைவில் ஆறுதல் கிடைக்கும் எனவும் தெரிவித்துள்ளார். (இ-7)

## மகாவலி அதிகார சபைக்கெதிராக மரத்தில் ஏறி குடும்பம் ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

தாய் மற்றும் இரு பிள்ளைகள் மரம் ஒன்றில் ஏறி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

தாம் வாழும் காணி மற்றும் வீட்டை மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை பலவந்தமாகக் கைப்பற்ற முயற்சிப்பதாகத் தெரிவித்து இவ்வாறு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

ஹிராதுரு கோட்டையிலுள்ள தமது வீட்டின் அருகாமையிலுள்ள மரம் ஒன்றில் ஏறி இவ்வாறு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

தமது வீட்டினை அதிகாரசபை உடைத்துவிடும் என குறித்த தாய் அச்சம் வெளியிட்டுள்ளார். (இ-7)

# இருவர் உயிரிழப்பு துப்பாக்கிச்சூடு குறித்து விசாரணைகள் தீவிரம்!

(கொழும்பு)

வத்தளை - ஹேக்கித்த பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் சீ.சீ.ரி.வி. காணொலிகள் கிடைத்துள்ள நிலையில், அதனைக்கொண்டு விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் இரு இளைஞர்கள் உயிரிழந்திருந்தனர்.

இந்நிலையில் இரண்டு கார்களில் வந்த சந்தேக நபர்களே இந்தத் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. மேலும் 24 தடவைகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தின் போது, உயிரிழந்த இளைஞர் ஒருவரின் தங்கையும் உடனிருந்த போதிலும் அவருக்கு எந்தவிதமான பாதிப்புக்களும் ஏற்படவில்லை.

இரு பாதாள உலகக் குழுக்களுக்கிடையில் ஏற்பட்டிருந்த முரண்பாடே இந்தச் சம்பவத்திற்கான காரணமென பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (இ-7)

# அலரிமாளிகையில் தேசிய தைப்பொங்கல்







(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் தேசிய தைப்பொங்கல் நிகழ்வுகள் அலரி மாளிகையில் இடம்பெற்றன.

பிரமர் அலுவலகமும் தேசிய நல்லிணக்கம்- அரச கருமமொழிகள்- சமூக முன்னேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சும் இணைந்து நடத்திய இந்த நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணியளவில் இடம்பெற்றது.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், சிறப்பு விருந்தினர்களாக சமய மத குருக்களும், வெளிநாட்டு இராஜதந்திரிகள்- தேசிய நல்லிணக்கம்- அரச கரும மொழிகள்- சமூக முன்னேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர் மனோ கணேசன், முன்னாள் எதிர்க்கட்சி தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், பெருந்தோட்ட கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஸ், அமைச்சர்களான அர்ஜுன ரணதுங்க, தயாகமகே, நாடாளுமன்ற உறுப்பினர்களான- எம்.ஏ.சுமந்திரன், வேலுகுமார், எம்.திலகராஜ் உட்பட பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டார்கள்

இந் நிகழ்வில் கலை நிகழ்ச்சிகளும் விருந்தினர்களின் உரைகளும் இடம் பெற்றன. (7)

## புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் குறித்து சிங்கள ஊடகம் புதிய தகவல் வெளியீடு

(கொழும்பு)

மீண்டும் வன்முறையை ஏற்படுத்துவதற்காக பாதாள உலகக் குழுக்களின் ஆதரவைப் பெறுவதற்கு புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் மேற்கொண்டுள்ள முயற்சி குறித்த தகவல்கள் புலனாய்வு அமைப்பினருக்குக் கிடைத்துள்ளது என சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது

புளியங்குளத்தில் மீட்கப்பட்ட ஆயுதங்கள் தொடர்பான விசாரணைகளின் போது இது தெரிய வந்துள்ளது என சிங்கள ஊடகம் தெரிவித்துள்ளது.

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலிகள் பாதாள உலகத்தலைவர்களுடன் எப்படித் தொடர்பை ஏற்படுத்தியுள்ளனர் என்பது குறித்து கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் தகவல் வெளியிட்டார் என சிங்கள ஊடகம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி,முன்னாள் ஜனாதிபதி, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் உட்பட மிக முக்கிய பிரமுகர்களை இலக்குவைப்பதற்காகப் புலம்பெயர் தமிழர்கள் பாதாள உலகத்தவர்களுக்குப் பணம் வழங்குகின்றனர் என அந்தச் சிங்கள ஊடகம் தெரிவித்துள்ளது. (இ-7)

# மேல் மாகாணத்தில் 100 நாள் துரித வேலைத்திட்டம் முன்னெடுப்பு

## ஆளுநர் அசாத்சாலி தெரிவிப்பு

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் கொழும்பு, கம்பஹா, களுத்துறை மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் 100 நாள் துரித வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளதாக மேல் மாகாண ஆளுநர் அசாத்சாலி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரதும் அனைத்து அமைச்சர்களினதும் ஒத்துழைப்புடன் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேல் மாகாண ஆளுநராகப் பதவியேற்ற பின்னர் நேற்று முன்தினம் இடம்பெற்ற வானொலி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு அவர் கருத்து வெளியிடுகையில் இந்த விடயங்களைத் தெரிவித்தார்.

மேல் மாகாணப் பாடசாலைகளில் நிலவும் ஆளணி மற்றும் பௌதீக வளக் குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கு மத்திய மற்றும் மாகாண கல்வி அமைச்சுக்களின் மூலம் விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

சுத்தம் சுகாதாரம் போதைப்பொருள் பாவனையற்றதும் சிறந்த போக்குவரத்து ஒழுங்கு விதிகளைப்பேணும் வகையிலும் மேல்மாகாணத்தை துரிதமாக கட்டியெழுப்புவதுடன் இதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்புப் பெற்றுக் கொள்ளப்படும். உள்நாட்டு - வெளிநாட்டு விசேட உதவிகளையும் பெற்று எட்டு மாகாணங்களுடனும் ஒன்றிணைந்து தமது பணிகளை முன்னெடுக்க இருப்பதாகவும் மேல் மாகாண ஆளுநர் மேலும் தெரிவித்தார்.



தமிழ் பேசும் மக்களுக்கு கடந்த காலங்களில் இடம்பெற்ற அவலங்கள் இனியும் தொடர இடமளிக்கப் போவதில்லை. தமது குறைகளை பொதுமக்கள் எந்த வேளையிலும் தன்னைச் சந்தித்து முறையிட்டு அதற்கான தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் மேல் மாகாண ஆளுநர் அசாத்சாலி தெரிவித்துள்ளார். (இ-7)

## பலாங்கொடையிலும் 'சேனா' தாக்கம்

(பலாங்கொடை)

'சேனா' படைப்புழு மற்றும் அவற்றின் கூட்டுப்புழுக்களுடன் காணப்பட்ட ஒரு தொகை சோளத்தை, இரத்தினபுரி - பலாங்கொடை வார சந்தையில், சந்தைப் படுத்துவதற்காக வைக்கப் பட்டிருந்த நிலையில் அவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பலாங்கொடை உதவி விவசாயப் பணிப்பாளரின் தலைமையில் குறித்த சோளம் தொகை கண்டறியப்பட்டுள்ளதுடன், வார சந்தையின் வர்த்தக நிலைய உரிமையாளர்களுடனும் இதுதொடர்பில் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

குறித்த சோள தொகையை உடனடியாக எரித்துவிடுமாறு பணிப்பு விடுக்கப்பட்டதோடு, வார சந்தையில் சந்தைப்படுத்தலுக்காக வைக்கப்பட்டிருந்த மற்றுமொரு தொகை சோளத்தையும் பரிசோதனைக்குட்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# போலி நாணயத்தாள் விற்ற 18 பேர் விளக்கமறியலில்

(கண்டி)

ஒரு மில்லியன் டொலர் என அச்சிடப்பட்ட 3 போலி நாணயத் தாள்களை விற்பனை செய்ய முயற்சித்த 18 பேரும் எதிர்வரும் 18 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் நேற்று முன்தினம் கண்டி நீதவானிடம் முன்னிலைப்படுத்தப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கண்டி பொலிஸ் ஊழல் ஒழிப்புப் பிரிவினரால் குறித்த 18 பேரும் அம்பிட்டிய பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டபோது, சந்தேக நபர்கள் வசமிருந்து, ஒரு மில்லியன் டொலர் என அச்சிடப்பட்ட மூன்று போலி நாணயத் தாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதானவர்கள் திருகோணமலை, புத்தளம், கந்தளாய், எல்பிட்டி, கொழும்பு, றாகமை, கனேமுல்லை மற்றும் வவுனியா பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அவர்கள் மூன்று குழுக்களாகப் பிரிந்து இந்த மோசடி முயற்சியில் ஈடுபட்டுள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகள் மூலம்தெரியவந்துள்ளது.(இ-7)

# அவர்கள் விரும்பும் அரசியல்...

சிங்க உறுதியளித்துள்ளார்.

நாட்டின் சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பில், சர்வதேச ஊடகம் ஒன்றின் இலங்கைச் செய்தியாளருக்கு வழங்கிய நேர்காணலிலேயே பிரதமர் இதனை தெரிவித்துள்ளார்.

இதன் போது மேலும் தெரிவித்த பிரதமர் ரணில் விக்ரமசிங்க, புதிய அரசமைப்புக்கு எதிராகக் கூக்குரல் கொடுப்பவர்கள், உத்தமர்கள் அல்லர் என்றும், அவர்கள் இந்த நாட்டை நாசமாக்கிய ஊழல் செய்த கொலைகாரர்கள் என்றும், இப்படியானவர்களின் மிரட்டல்களுக்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசு அடிபணியாது என்பதோடு, புதிய அரசமைப்பை நிறைவேற்றியே தீருவோம் என்றும் அவர் சவால் விடுத்துள்ளார்.

அரசியல் சூழ்ச்சியை முறியடித்து தான் மீண்டும் பிரதமராகுவேன் என, வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் நம்பியதாகவும், அவர்களின் நம்பிக்கை வீண்போகவில்லை என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேராதரவுடன் தான் மீண்டும் பிரதமராகியுள்ளதாகவும், எனவே, தமிழ் மக்களுக்கு என்றும் நன்றியுடையவனாக இருப்பதுடன், தன்னை நம்பும் தமிழர்களை ஒருபோதும் கைவிடப் போவதில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு நாட்டில் சகல மக்களும் சமவுரிமையுடன் சமாதானமாக, ஒற்றுமையாக வாழ, தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்றும், இதனைப் புதிய அரசமைப்பின் ஊடாகப் பெற்றுக் கொடுப்பேன் என்றும் உறுதியளித்துள்ளார்.

மேலும் தான் மீண்டும் பிரதமராகியதன் பின்னர் ஆற்றிய உரையில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியே தீருவேன் என்றும் அதலிருந்து ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லை என்றும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

நாட்டைப் பிளவுபடுத்தாமல் ஒருமித்த நாட்டுக்குள் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை வழங்கவுள்ளதாகவும், மீண்டும் ஒரு குடும்ப ஆட்சிக்கோ, சர்வாதிகார ஆட்சிக்கு இடமளிக்கப் போவதில்லை என்றும் அந்த நேர்காணலில் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-3)

# 22 வயது இளை...

மேற்படி உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாணம் பருத்ததித்துறை கற்கோவளம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு குறித்த இளைஞரின் நண்பர் அப்பகுதியில் வந்த சிற்றுண்டி விற்பனை செய்யும் வண்டியை மறித்து றோல் கேட்டுள்ளார். அப்போது இரு பகுதியினருக்கு இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இறுதியில் இரு பகுதியும் மோதலில் ஈடுபட்டுள்ளனர். இதில் மேற்குறித்த இளைஞரை மற்றொரு நபர் கோடரி பிடியினால் தாக்கியுள்ளார். இதனால் குறித்த இளைஞர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

குழு மோதல் மற்றும் இளைஞரின் கொலை தொடர்பாக கற்கோவளத்தைச் சேர்ந்த முச்சக்கரவண்டி சாரதியையும் அவரது மகனையும் சந்தேகத்தின் பேரில் பருத்தித்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ம-9,60,101)

# இலஞ்சம் பெற்...

பொருளாதார உத்தியோகத்தர் கேட்டதற்கு இணங்க பணம் வழங்கப்பட்ட போது குறித்த அரச உத்தியோகத்தரை கைது செய்துள்ளனர்.

இது தொடர்பில் பிரதேச செயலர் கிருஸ்னேந்திரன் அவர்களைத் தொடர்பு கொண்டு கேட்ட போது மேற்படி சம்பவம் உண்மையென்றும் குறித்த குற்றச்சாட்டுத் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு அறிக்கையினை அனுப்பி வைப்பதாக லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் அதிகாரிகள் தெரிவித்ததாக தெரிவித்துள்ளார். (ம-315)

# உழவு இயந்திர...

ருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று மாலை சாவகச்சேரி பொலிஸார் அப்பகுதிக்கு சென்றுள்ளனர்.

அப்போது உழவு ,யந்திரத்தில் மணல் கடத்தலில் ஈடுபட்டிருந்தவர்களை கண்டு அவர்களை கைது செய்ய முற்பட்டுள்ளனர். அப்போது அவர்கள் உழவு இயந்திரத்தால் பொலிஸாரை மோதித்தள்ளிவிட்டு தப்பி சென்றுள்ளார்கள்.

இதில் ஒரு பொலிஸாரின் நெஞ்சுபகுதியிலும் மற்றை இரு பொலிஸாரின் கால் பகுதியிலும் உழவு இயந்திரத்தின் சக்கரம் ஏறியதில் படுகாயம் ஏற்பட்டுள்ளது. காய மடைந்த பொலிஸார் உடனடியாக சாவகச்சேரி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனாவைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். தப்பிச்சென்றவர்கள் தொடர்பான விசாரணையை சாவகச்சேரி பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.(ம-9,101,89.30)

# பொங்கலை...

முல்லைத்தீவு மாவட்டம் பழைய செம்மலை நாயாற்றுப் பகுதியில் உள்ள நீராவியடி பிள்ளையார் ஆலயத்தில் நேற்று செம்மலை கிராம மக்களால் ஏற்பாடு செய்த ஆண்டு பொங்கல் நிகழ்வும் அன்னதான நிகழ்வும் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்ட நிலையில் நேற்றுக் காலை பிரதேச தமிழ் மக்கள் பிள்ளையார் ஆலயத்திற்கு சென்று பொங்கல் வழிபாடுகளில் ஈடுபட்ட வேளை நீராவியடி பிள்ளையார் ஆலயத்தினை ஆக்கிரமித்து பௌத்த விகாரையினை அமைத்துள்ள பௌத்த மதகுரு ஒருவர் தலைமையில் தென்பகுதியிலிருந்து வருகை தந்த 40ற்கு மேற்பட்ட சிங்களவர்களும் பௌத்த மதகுரு மாரும் தமிழ்மக்கள் மீது பிரச்சினையினை ஏற்படுத்தும் வகையில் பொங்கல் பூசை வழிபாடுகளில் ஈடுபட்ட மக்கள் மீது தர்க்கம் ஏற்படுத்தியுள்ளார்கள்.

மக்களை பொங்கல் வைக்கவிடாமல் குறித்த பகுதியில் விகாரை அமைத்துள்ள விகாராதிபதி தடுக்க முற்பட்டுள்ள நிலையில் இரு தரப்பிற்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளதை தொடர்ந்து விகாரைக்கு அருகில் உள்ள படையினர் மற்றும் படை அதிகாரிகள் குறித்த இடத்திற்கு வந்து பௌத்த மதகுருமாரையும் சிங்கள மக்களையும் சமாதானப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்ட வேளையில் முல்லைத்தீவு பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து விகாராதிபதியுடன் கலந்துரையாடலை மேற்கொண்டு விட்டு ஒலிபெருக்கி மூலம் தமிழ் மக்கள் வழிபாடுகளை செய்தவேளை ஒலிபெருக்கி பாவிக்க தடை. நீங்கள் ஆலயத்தில் ஒலி பெருக்கி பயன்படுத்தவேண்டாம் எனவும் கூறியதோடு பொங்கல் வழிபாடுகளை மேற்கொண்ட பெண்கள் சிறுவர்கள் அனைவரையும் புகைப்படங்களை எடுத்து தமிழ் மக்களின் வழிபாடுகளை மேற்கொள்ள விடாது இடையூறுகள் ஏற்படுத்தியிருந்தனர்.

ஆலயம் பௌத்த ஆலயம் என்றும் அது பௌத்த மதத்திற்குரிய இடம் என்றும் அதில் தமிழ் மக்கள் பொங்கல் வழிபாடுகளை மேற்கொள்ளமுடியாது என்றும் தெற்கில் இருந்து வருகைதந்த பௌத்த துறவிகளும் பெரும்பான்மை சமூகம் சார்ந்தவர்களும் கருத்து முரண்பாடுகளை மேற்கொண்டு பிரச்சினையினை தோற்றிவிக்க முற்பட்டவேளை பொலிஸாரின் தலையீட்டினை தொடர்ந்து பிரச்சினை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டு செம்மலை கிராம மக்கள் பிள்ளையார் ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொண்டனர். (ம-281)

# 8 இந்திய மீனவர்களும் 23 ஆம் திகதிவரை விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பில் படகு கவிழ்ந்து நடுக்கடலில் தத்தளித்த இந்திய மீனவர்கள் 8 பேரையும் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

இவர்களுடன் புயணித்த மேலும் ஒரு மீனவர் சடலமாக மீட்கப்பட்டிருந்தார். அவரது உடலை நேற்று சக மீனவர்கள் அடையாளம் காட்டியுள்ளார்கள்.

தமிழகத்தில் இருந்து கடந்த சனிக்கிழமை மீன் பிடிப்பதற்காக சென்ற தமிழக மீனவர்கள் படகு விபத்துக்குள்ளாகிய நிலையில் நடுக்கடலில் கடற்படையால்மீட்கப்பட்டனர்.

இவர்களில் இராமநாத புரத்தை சேர்ந்த கருப்பையா மாரிச்சாமி (வயது 55) என்பவரின் சடலத்தை காங்கேசன்துறை பொலிஸார் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைத்தனர். காங்கேசன்துறை பொலிஸாருக்கு மீனவர் சடலமாக மீட்கப்பட்ட தகவலை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை காங்கேசன்துறை கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

அது தொடர்பில் பொலிஸார் மல்லாகம் நீதிவானுக்கு அறிவித்தனர். பொலிஸாரும் நீதிவானும் இரவு காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு சென்றனர். சடலத்தை பார்வையிட்ட நீதிவான் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்க உத்தரவிட்டார்.

அந்நிலையில் உயிரிழந்த மீனவரின் படகில் இருந்த ஏனைய மூன்று மீனவர்களையும் கடற்படையினர் கைது செய்து காங்கேசன்துறை பொலிசாரிடம் ஒப்படைத்திருந்தனர். குறித்த மூன்று மீனவர்களும் நேற்றையதினம் யாழ்.போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர். உயிரிழந்த மீனவரை அடையாளம் காட்டியிருந்தனர்.

அத்துடன் அந்த 3 மீனவர்களுடன் ஏனைய 5 மீனவர்களையும் நீதிமன்றில் முற்படுத்திய போது அவர்களை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (ம-9)

# அரசியல் நெரு...

தொடர்பில் சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் நீதிமன்றத்தை நாடவுள்ளதாக தெரிவித்துள்ளமை உண்மைக்கு புறம்பானவை.

எதிர்க்கட்சி பதவி விவகாரம் தொடர்பீல் சுதந்திரகட்சியின் 21 உறுப்பினர்களும் நீதிமன்றத்தை நாடவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்ற கருத்து தொடர்பாக வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ம-3)

# மாகாண சபை...

எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த ஆண்டு இறுதிக்குள் மாகாணசபை தேர்தலை நடத்த தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ள நிலையில் அது குறித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்னவென வினவிய போதே கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ம-3)

# குடும்பப் பெண் மீது...

முன்னால் பொங்கலுக்கான ஆயத்த வேலைகளில் ஈடுபட்டிருந்த தாய் மீது வாளால் வெட்டிவிட்டு தப்பி சென்றுள்ளனர்.

குறித்த தாக்குதல் சம்பவத்தில் முச்சக்கர வண்டி, வீட்டு யன்னல், கதவு என்பன சேதமாக்கப்பட்டுள்ளது. குறித்த சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்படடுள்ளது. பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். (ம-9)













ஸ்ரீ நாககன்னி அம்பாள் துணை





**சித்தன்கேணி**
**அருள்மிகு**
**ஸ்ரீ நாககன்னி**
**அம்பாள் ஆலயம்**

**தீ மிதிப்பு பெரு விழா - இன்று 15.01.2019**
**செவ்வாய்க்கிழமை**
**நண்பகல் 12.00 மணி**

கிரியைகளை சிறப்புற நிகழ்த்துபவர்

சாமஸ்ரீ, தேசமான்ய, சமூக ஜோதி,
சேவைநெறிச் செம்மல்
**சித்தஞானகுரு இந்திரன் ஐயா**

உதவிக் குரு – திரு.செ.ஸ்ரீசுதாகர் (சுதா)
அருளாசியுரை – ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமசாரிய சுவாமிகள்
ஆசியுரை – சிவஸ்ரீ சோ.இ.பிரணபார்த்திகரகுருக்கள்
வாழ்த்துரை – சிவஸ்ரீ சபா வாசுதேவ குருக்கள்
சொற்பொழிவு – சைவ சித்தாந்த கலாநிதி சைவப்புலவர் செ.கந்தசத்தியதாசன்
சைவ சின்னையர் – க. நித்தியபாபுதரன்
சைவ சின்னையர் – க.கைலநாதன்
மங்கல வாத்தியம் – நாதஸ்வரச்சக்கரவர்த்தி
– S.பாலமுருகன் குழுவினர் (ஈழநல்லூர்)
– K.N.இராமநாதன் குழுவினர் (வட்டூர்)
– கண்ணன் குழுவினர் (சித்தன்கேணி)
நன்றியுரை – லயன் க.நந்தகுமாரன்

*அனைவரும் வருக... அம்பாள் அருள் பெறுக...*

(C-5157)

A/L படித்து விட்டு வேறு முயற்சியில்லாது இருக்கும் பெண்கள், திருமணமான பெண்களுக்கான வேலை வாய்ப்பு. நேரடியாக வந்து சந்திக்கவும்.
16.01.2019
காலை 9 மணி - மாலை 5மணி வரை
British College of Higher Studies
15, Sirambiyady lane, Stanley Road,
Jaffna.
லங்கா சதொச மேல் மாடி
021 222 4550
(7154)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK- 550 */=Kg
கனடா-900 */=Kg
ஜேர்மனி- 700 */=Kg
நெதர்லாந்து-700 */=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELS
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(C-5112)

O/L உடன் 6 மாத பயிற்சி பெற்று
டுபாய், குவைத், ஓமான், சுவிஸ், நியூசிலாந்து, மலேசியா, அவுஸ்ரேலியா, கனடாவில்
ரூ.70,000 முதல் ரூ.2 இல. க்குமேல் சம்பளத்துடனான வேலைவாய்ப்புடன்...
TOURISM & Hospitality Management
ஆரம்பம் ஜன. 16
சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம்
ஹொட்டேல் தொழில்துறைப் பயிற்சி
FREE ENGLISH for COMMUNICATION
021 222 00 11, 077 36 16 798, 0777 324 004
No.1 Award Winning Institute of the North
10வது ஆண்டில் காலடி பதிக்கும்
SIKARAM ACADEMY
Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY
Sri Lankan Entrepreneur of the Year 2017
10க்கு மேற்பட்ட அணிகள் - 100க் கணக்கான மாணவர்கள்
221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
www.sikaram.lk Sikaram Academy
(C-5098)

## ஜனாதிபதியை...

பதிவுகள் தொடர்பிலான விசாரணைக ளுக்காகவே அவர் நேற்று திங்கட்கிழமை குறித்த திணைக்களத்தில் முன்னிலையாகி யுள்ளார்.

குறித்த கொலைத் திட்டத்துடன் தொடர்பு டைய குரல் பதிவுகளில் பொலிஸ்மா அதிப ரின் குரல் பதிவுகளும் உள்ளடங்குகின்ற னவா என்பது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளவே அவருக்கு இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி நேற்று காலை 9.30 மணிய ளவிலிருந்து அவரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற் றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரை கொலை செய்வதற்கு திட்டம் தீட்டியதாக பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர மீது குற்றம் சுமத்தப் பட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது. (ம-3)

## அரசி...

பெற்றுக்கொண்ட போதே அநுநாயக்க தேரர் இதனைக் குறி ப்பிட்டுள்ளார். (ம-3)

குவைத் வேலைவாய்ப்பு
மோட்டார் சைக்கிள் டிலிவரி ஆட்கள்
(இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம் போதுமானது)
மோ. சைக்கிள் மெக்கானிக்
கார் சாரதி
(மத்தியகிழக்கு சாரதி அனுமதிப்பத்திரம்)
உணவு, தங்குமிட வசதி, போக்குவரத்து, மருத்துவ ஏற்பாடுகள் கம்பனியினால் வழங்கப்படும்.
ஆரம்ப கட்டணம் இல்லை
பதிவுக் கட்டணம் ரூ.200
சம்பளம் ரூ. 71,640/-
077 00 38 215
021 221 9 221
Emerald Isle
Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
License No. 2268
221-1/1 மின்சார நிலைய வீதி 2ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்
www.emeraldisle.lk
email: jaffna@emeraldisle.lk
வடக்கின் 1வது & ஒரேயொரு வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்
(C-5099)

உடனடி வேலைவாய்ப்பு
எமது சர்வதேச நிறுவனத்தின் அரச அங்கீகாரம் பெற்ற இலங்கைக் கிளைகளில் 2019ம் ஆண்டிற்கான சிறந்த வேலைவாய்ப்பு.
● எதிர்காலத்திற்கான திட்டமிடல்.
● சிறந்த சம்பளத்துடன் கூடிய பதவி உயர்வு.
● வடக்கு, கிழக்கு விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை.
தொடர்புகளுக்கு: 0766668385
(7154)

FLC FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்சு
Embassyஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)
40, பலாலி வீதி, அரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 26.01.19 சனி 10 மணி
181, பிரதான வீதி, நெல்லியடி. 0779 789 456 / 0762 669 614 ஆரம்பம் : 28.01.19 3.30pm
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.
(C-5113)

அபாகஸ் / Abacus
உங்கள் பிள்ளைகளின் வேகமான மனக்கணித, நுண்ணறிவு விருத்திக்கான உத்தரவாதமான பயிற்சி.
புலமைப்பரிசில் பரீட்சையில் அதிஉயர் சித்தியை எய்துவதற்கான மிகவும் பிரயோசனமான பாட நெறி. சிறார்களுக்கு level -1 level - 8 வரை. பயிற்சிகள் முடிவிலும் பரீட்சைகள்.
SIP Abacus (Jaffna Branch)
British College of Higher Studies
Stanley Road, 15, Sirambiyady lane, Jaffna. லங்கா சதொச மேல் மாடி
021 222 4550 / 076 138 0212
(C-5153)

வேலையாட்கள் தேவை
நெல்லியடியில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள Fancy, பெண்களுக்கான Modern dress, Beauty parlowr ஆகிய மூன்று வியாபார ஸ்தாபனத்துக்கு அனுபவம் உள்ள, அனுபவமற்ற பெண்கள் வேலைக்குத் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். நேர்முகத் தேர்வு நாளை (16.01.2019) புதன்கிழமை தொடக்கம் 19.01.2019 சனிக்கிழமை வரை நடைபெறும். நேர்முகத் தேர்வுக்கு வர விரும்புபவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துக்கு முன்னறிவித்தல் செய்துவிட்டு C.V, அனுபவ சான்றிதழ்கள் உடன் No.79, Main Street, Nelliaydi எனும் முகவரிக்கு நேரில் வந்து கலந்து வேலையில் இணையலாம்.
தொடர்புகளுக்கு:
0762346034, 0715270420
(7144)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
> பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
> அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
> யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

NEW SCIENCE HALL
Kannathiddy Jaffna
➤ A/L, 2021 Batch
English Medium
Wednesday & Thursday
01.00 - 3.00 pm
➤ A/L 2019 Repeat Batch
English & Tamil Medium
➤ Organic Paper Class
Mon - Thu 6.30pm - 8.30pm
➤ Inoganic Paper Class
Tue - Fri 9.30am - 11.30am
By: S.V.SELVARANJAN
(Colombo Royal College Teacher)
(C-5152)

Happy Pongal
இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்
jitf.lk
www.jitf.lk

RIZWAN +773 959 835
rizwan@saexhibitions.com
10TH EDITION
JITF 2019
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
ஜனவரி / January
10.00 am - 8.00 pm
யாழ்ப்பாணம் மாநகரசபை மைதானத்தில்
Municipal Ground - Jaffna
PLATINUM SPONSOR INSEE CEMENT
GOLD SPONSOR Browns A Heritage of Trust
OFFICIAL PARTNERS
HEALTH CARE · FOOD · BANKING · TELECOMMUNICATION · FERTILITY CARE · ROOFING · ONLINE MEDIA · PRINT MEDIA
ORGANIZED BY LECS LANKA EXHIBITION · IN ASSOCIATION WITH CCIY · SUPPORTED BY · ENDORSED BY
(7149)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.01.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.